Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

யாழ் நகரில்
பாடசாலை மாணவர்களுக்கும், அலுவலக உத்தியோகஸ்தர்களுக்கும் ஏற்ற
SILVER SHIELD SOCKS
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S. வீதி, யாழ்ப்பாணம் T.P: 222 5392

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆவணி 01 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.ஆகிர் 29 (17.08.2004) செவ்வாய்க்கிழமை இதழ்:319

## தென்னிலங்கை அதிகாரப் போட்டிகள்

# சமாதானப் பேச்சுக்களை இழுத்தடிப்பது நெருக்கடியான கட்டத்துக்கு தள்ளிவிடும்!

## ஐரோப்பிய தூதுவரிடம் தமிழ்ச்செல்வன் எடுத்துரைப்பு

(கிளிநொச்சி)

**தென்னிலங்கையில் தங்களுடைய அதிகாரத்தைப் பலப்படுத்துவதற்கும், அதிகாரப் போட்டிகள் காரணமாகவும் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் இழுத்தடிக்கப்படக்கூடாது.**

**இந்தச் சமாதான முயற்சிகள் இழுத்தடிக்கப்படுவதால் தமிழ்மக்கள் நம்பிக்கையிழந்து, விரக்தியடைந்து கொண்டு செல்கின்றனர்.**

**இது மிக நெருக்கடியான கட்டத்துக்குள் தள்ளிவிடும் என்று தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் நேற்று நெதர்லாந்து, பிரித்தானிய ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர்களிடம் தெரிவித்தார்.**

நேற்றுக்காலை 11 மணிக்கு சமாதான செயலகத்தில் நடைபெற்ற இந்தச்சந்திப்பில், விடுதலைப் புலிகள் சார்பில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசனும் கலந்துகொண்டார்.

நெதர்லாந்து தூதுவர் அசன் பிளங்கட், இங்கிலாந்து தூதுவர் ஸ்ரீபன் இவன்ஸ், ஐரோப்பிய யூனியன் தூதுவர் வூட்டர் வில்சன் ஆகியோருடனான இந்தப் சந்திப்பின் பின்னர்-

செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்ததாவது -

ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த தூதுக் குழுவினர் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் தொடங்குவது சம்பந்தமான நிலைப்பாட்டைத்தான் வலியுறுத்தினார்கள். நாங்களும் எமது நிலைப்பாட்டைத் தெளிவாக்கியிருக்கிறோம். அவர்களும் அதைப்புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழ்மக்களின் ஆணையோடு சமர்ப்பித்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபை என்ற அடிப்படையில் பேச்சுவார்த்தைகளைத் தொடக்குவதற்கு மிகுந்த ஆர்வத்தோடு இருக்கின்றார்கள் என்பதை நாங்கள் எங்களுடைய தலைமைப்பீடத்தின் நிலைப்பாட்டை முன்வைத்திருக்கின்றோம். (12 ஆம் பக்கம் பார்க்க)







## நாட்டுப்பற்றாளர் இரத்தினம் கொழும்பில் காலமானார்!

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தனது ஆற்றலை கணிசமான அளவு வழங்கிவந்த நாட்டுப்பற்றாளர் எஸ்.இரத்தினம் நேற்றுமுன்தினம் கொழும்பில் காலமானார். 3 வாரங்களுக்கு முன் திடீரென சுகவீனமுற்ற இவர் கொழும்பில் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டாரெனினும், அது பலனளிக்காத நிலையில் காலமானார்.

அன்னாரது பூதவுடல் இன்று கிளிநொச்சி அரசியற்துறை நடுவப் பணியகத்திலும், கிளிநொச்சி மாவட்ட செயலகத்திலுள்ள சிரான் தொகுதியிலும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின் யாழ்ப்பாணம் எடுத்து வரப்படும்.

வேலணை உதவி அரச அதிபராகப் பணிபுரிந்த காலத்திலும், பின்பு கிளிநொச்சியில் சிரான் அமைப்பிலும், சமாதான செயலகத்திலும் இணைப்பாளராகப் பணிபுரிந்த காலத்திலும் - இரத்தினம் தனது இயல்பான தேசப்பற்றின் அர்ப்பணிப்புடன் மனமுவந்து பல முக்கிய பணிகளில் ஈடுபட்டிருந்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.க ஆட்சியிலிருந்திருந்தால் தமிழீழம் உருவாகியிருக்குமாம்!

## ஜே.வி.பி அமைச்சர் அநுரகுமார திஸநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி தொடர்ந்தும் ஆட்சியிலிருந்திருந்தால் இன்று தமிழீழம் உருவாகியிருக்கும் என்றும் -

தனிநாடொன்றை அமைப்பதற்கான விடுதலைப் புலிகளின் முயற்சிகளைத் தடுக்கும் வகையில் செயற்பட்டுவரும் அரசாங்கத்திற்குத் தாம் நன்றி தெரிவிப்பதாகவும் - ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

ஜே.வி.பியின் [illegible]முக்கியஸ்தரும் விவசாய அமைச்சருமான அநுரகுமார தி[illegible]க்க கண்டியில் இடம்பெற்ற நிகழ்ச்சி ஒன்றில் உரை[illegible]போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொட[illegible]கையில் இடைக்காலநிர்வாகசபை யோசனைகள் இ[illegible]ங்கையிலும், வெளிநாடுகளிலும் முதன்மைப்படுத்தப்பட்டு[illegible]ளபோதிலும் ஜே.வி.பியினர் இந்த யோசனைகளின் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஈ.பி.டி.பியின் பிரசார செயலர் கொழும்பில் சுட்டுக் கொலை!

## நேற்றுக் காலை சம்பவம்



(கொழும்பு)

ஈ.பி.டி.பியின் பிரசாரச் செயலரும், மூத்த உறுப்பினருமான சின்ன பாலா என்று அழைக்கப்படும் பாலநடராஜ ஐயர் நேற்றுக் காலை கொழும்பு நகரிலுள்ள அவரது வீட்டுக்கு அருகில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்றுக் காலை 7.50 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரான கந்தசாமி ஐயர் பாலநடராஜ ஐயர் (வயது 44) என்ற சின்னபாலா ஈ.பி.டி.பியின் பிரசாரசெயலராகச் செயற்பட்டுவந்தவர்.

தினமுரசுப் பத்திரிகையின் ஆசிரியபீடத்தைச் சேர்ந்த இவர், கட்சியின் உத்தியோகபூர்வ பத்திரிகையான 'மக்கள் குரலின்' பிரதம ஆசிரியராக இருந்தவராவார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம்!

நொராட் வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பது தொடர்பாக ஆராயவென நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சின் மேலதிக செயலாளரான குமாரதாஸன் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார்.

யாழ்.செயலகத்துக்கு நேற்றுக் காலை 10 மணியளவில் வருகை தந்த அவர் யாழ்.அரச அதிபர் செ. பத்மநாதன், யாழ்.மாவட்ட நொராட் திட்ட அதிகாரிகள் மற்றும் யாழ் செயலக அதிகாரிகள் முதலானோருடன் கலந்துரையாடலை நடத்தினார்.

இந்தக் கலந்துரையாடலில், யாழ்.நகரப் பகுதியில் உள்ள குளங்களைப் புனரமைப்பது மற்றும் குப்பைகளிலிருந்து கூட்டெரு தயாரிப்பது முதலான விடயங்கள் ஆராயப்பட்டன

இதேவேளை - கூட்டெரு தயாரிப்புக்கான குப்பை அள்ளும் இயந்திரமொன்றும் நொராட் நிறுவனத்துக்கு கையளிக்கப்பட்டது.

யாழ். அரச அதிபரின் மேற்பார்வையிலேயே நொராட் செயற்படும் எனவும், ஏற்கனவே கூறப்பட்டபடி நொராட்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# உள்ளூராட்சி வார இறுதிநாள் நிகழ்வு

வலி. கிழக்குப் பிரதேசசபையின் உள்ளூராட்சி வாரஇறுதி நாள் கலை நிகழ்வு இன்று பிற்பகல் 2.00 மணிக்கு ஆவரங்கால் சிவசக்தி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேசசபைச் செயலாளர் இ. இராஜதுரை தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி ஆணையாளர் து.விஜயலட்சுமி, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா, உதவிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் உள்ளூராட்சி வாரத்தையொட்டி பிரதேச சபையால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கப்படவுள்ளது. (90)


## பணிநிலை வேண்டுகை

கிளிநொச்சிப் பகுதியில் இயங்கும் கல்விசார் நிறுவனமொன்றுக்குக் கீழ்க்குறிப்பிடப்படும் பணிநிலைக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**பணிநிலை:-** ஆசிரியர்

**பாடங்கள்:-** கணிதம்
விஞ்ஞானம்
தமிழ்மொழி
வர்த்தகம்

**தகைமைகள்:-**

- க.பொ.த உயர் தரத்தில் குறித்த பாடப்பரப்பில் 3 பாடம் சித்தி.
- பட்டதாரிகளுக்கு முன்னுரிமை.
- ஊதியம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தகைமையுடையோர் 21.08.04. அன்று 10 மணிக்குக் கிளிநொச்சி மகாவித்தியாலயத்துக்குத் தமது சுய விபரக் கோவை மற்றும் கல்விச் சான்றிதழ்களுடன் வருகை தரவும்**

(C/2803)


## கண்ணீர் அஞ்சலி

மண்ணில் மலராக 10 . 03 . 1941



மண்ணில் வித்தாக 16 . 08 . 2004

நாட்டுப்பற்றாளர்

அமரர் **செல்லையா இரத்தினம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்கள் நண்பர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

- சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை -

(908)

## யாழ்ப்பாண மாநகரசபை

**இத்தால் சகலருமறிக;**

கஸ்தூரியார் வீதிக்கும், ஸ்ரான்லி வீதிக்கும், தபாற்கந்தோர் இணைப்பு வீதிக்கும் இடையில் வண்ணாங்குளத்திற்கு அருகில், தமக்கு காணி உரித்துடமை இருப்பவர்கள் 31.08.2004 ஆம் திகதிக்கு முன்னர் மாநகரசபை சட்ட ஆலோசகர் திரு.அருளம்பலம் இராஜரட்ணம், எல்.எல்.பி, சட்டத்தரணி அவர்களை திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் பிற்பகல் 3.00 மணி தொடக்கம் 4.30 மணிவரை யாழ்.மாநகரசபைப் பணிமனையில் சந்தித்து, தங்களது ஆவணங்களைப் பரிசீலிப்பதற்கு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கலாநிதி.க.குணராசா,**
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி-2942)

# பிரதேச செயலரின் அனுமதிப்பத்திரத்துடன் ஒப்பந்தகாரர்கள் மணல் பரிமாற்றவேண்டும்

## யாழ்.நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா உத்தரவு

(யாழ்ப்பாணம்)

கட்டட ஒப்பந்தகாரர்கள் தமது மணல் பரிமாற்ற நடவடிக்கைகளுக்கு பிரதேச செயலக அனுமதிப்பத்திரங்கள் வைத்திருக்கவேண்டுமென, யாழ். மாவட்ட நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்துத் தெரியவருவதாவது -

கட்டட ஒப்பந்தகாரர்கள் தமது கட்டடப் பணிகளுக்காக மணலை ஓரிடத்தில் களஞ்சியப்படுத்துகின்றனர். பின்னர் தமது கட்டட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பகுதிகளுக்கு மணலை எடுத்துச் செல்கின்றனர். அவ்வேளை பொலிஸாருடன் முரண்படவேண்டிய நிலை தோன்றுகின்றது.

ஏனெனில், ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட மணல் மீண்டும் ஏற்றி இறக்கும்போது பொலிஸாரால் அது கள்ள மணலோ என ஐயம் கொண்டு பரிசீலிக்க முற்படும்போது கட்டட ஒப்பந்தகாரர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே முரண்பாடுகள் தோன்றுகின்றன.

இதனைத் தவிர்ப்பதற்காகவே நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். இதன் பிரகாரம் கட்டட ஒப்பந்தகாரர்கள் தாம் மணல் வைத்திருக்கும் இடத்தில் கிராம சேவையாளரின் உறுதிப்படுத்தலுடன் தமது பிரதேச செயலகங்களில் அல்லது உதவி அரச அதிபர் அலுவலகங்களில் உள்ள தகுதிவாய்ந்த அதிகாரியின் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிக் கடிதத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அவ்வாறு பெற்றிருப்பதன் மூலம் பல சிக்கல்களைத் தவிர்க்க முடியும். இந்த நடைமுறை குறித்து உடனடியாக யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களுக்கும் அறிவிக்குமாறு யாழ். மாவட்ட நீதிபதி, பதிவாளருக்கு உத்தரவிட்டுள்ளார். (ப)

## நமது ஈழநாடு

### இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்படும் கலை, இலக்கிய - போட்டிகள்

நமது ஈழநாடு பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி கலை - இலக்கியப் போட்டிகளை நடத்துவதற்கு தீர்மானித்திருப்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

**போட்டிக்கான விதிகள்**

### சிறுகதை மற்றும் கவிதைப் போட்டி

- படைப்புக்கள் யாவும் படைப்பாளியின் சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும் - மொழிபெயர்ப்புக்கள் நிராகரிக்கப்படும்.
- சிறுகதைகள் யாவும் தெளிவான எழுத்திலோ, தட்டச்சு செய்யப்பட்டோ இருத்தல் வேண்டும். கையெழுத்தில் 7 பக்கங்களுக்குள்ளும் - தட்டச்சில் 5 பக்கங்களுக்குள்ளும் இருப்பது அவசியம்.
- கவிதைகள் மரபுக்கவிதையாகவோ அல்லது புதுக்கவிதையாகவோ இருக்கலாம். எதுவானாலும் 20 முதல் 30 வரிகளுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்கள் யாவும் சமகால சமூகவியல் - வாழ்வியல் பிரச்சினைகளை மையமாகக் கொண்டவையாக இருத்தல் வேண்டும்.
- ஆக்கங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 15-09-2004 ஆகும்.

### புகைப்படப் போட்டி

- புகைப்படத் துறையில் ஆர்வமுள்ளவர்கள் தொழில் சார் கலைஞர்கள் எவரும் இதில் பங்குபற்றலாம் - வயது வேறுபாடில்லை.
- போட்டிக்கு அனுப்பப்படும் படங்கள் கறுப்பு வெள்ளைப் படங்களாகவும் இருக்கலாம். வண்ணப்படங்களாகவும் இருக்கலாம். அளவு 6 CM X 4 CM ஆக இருத்தல் அவசியம்.
- புகைப்படங்கள் - எமது மண்ணின் இயற்கையழகு எமது மண்ணின் பாரம்பரியம், சமகால வரலாற்றுப் பதிவுகள் ஆகியவற்றைப் பதிவு செய்ததாக இருக்கவேண்டும்.
- ஒருவர் மூன்று படங்கள் வரை அனுப்ப முடியும். ஆனால் ஒரு படத்துக்கு மட்டுமே பரிசு வழங்கப்படும்.
- புகைப்படங்களுடன் பெயர் விலாசம் போன்றவை தனியாக இணைக்கப்படல் வேண்டும்.
- அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 15-09-2004 ஆகும்.

### கையெழுத்து சஞ்சிகை உருவாக்கல் போட்டி

*நிபந்தனைகள்*

இந்தப் போட்டி இரண்டு பிரிவுகளாக நடத்தப்படும்.

1. பாடசாலை மாணவர்களுக்கானது.
2. தனிநபர் - தனி யார் அமைப்புக்களுக்கானது

பாடசாலை மாணவர்களுக்கான போட்டி மத்திய பிரிவு - மேற்பிரிவு என இரு பகுதிகளாக நடத்தப்படும்.

**மத்திய பிரிவு-** க.பொ.த (சாதாரண) தரத்திற்கு உட்பட்டவர்களுக்குரியது.

**மேற்பிரிவு -** அதற்கு மேற்பட்டவர்களுக்குரியது.

- போட்டிக்கு சமர்ப்பிக்கப்படும் சஞ்சிகைகள் மாணவர்களின் சுய படைப்பாற்றல் மற்றும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துபவையாக இருக்க வேண்டும்.
- சஞ்சிகைகள் 40 முதல் 50 பக்கங்கள் வரையுள்ளதாகவும் ஒரு அழகான கலைத்துவமான சஞ்சிகைக்குரிய தரமான வடிவமைப்புக் கொண்டதாகவும் தெளிவான கையெழுத்துக்களில் எழுதப்பட்டவையாகவும் இருத்தல் வேண்டும்.
- தனிநபர்கள் - தனியார் அமைப்புகள் ( இலக்கிய வட்டங்கள் - சனசமூகநிலையங்கள்) அனுப்பிவைக்கும் சஞ்சிகைகளும் மேற்குறிப்பிட்ட விதிகளை அனுசரிக்க வேண்டும்.
- மாணவர்கள் தங்களின் சஞ்சிகை தயாரிப்பில் தமது ஆசிரியர்களின் ஆலோசனைகளை நாடமுடியும்.
- மிகத் தரமானதெனத் தேர்தெடுக்கப்படும் - சஞ்சிகைகளுக்குரிய சகல அம்சங்களையும் உள்ளடக்கிய ஆக்கங்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகள் வழங்கப்படும்.
- சஞ்சிகைகள் கிடைக்க வேண்டிய கடைசித் திகதி 15.09.2004
- பதிவுத்தபாலில் அனுப்புதல் பாதுகாப்பானது - நேரிலும் கையளிக்கலாம்.
- பாடசாலை மாணவர்களின் சஞ்சிகைகள் பாடசாலை வகுப்பாசிரியர் அல்லது அதிபரால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

**குறிப்பு:-** இப்போட்டிகளில் நமது ஈழநாடு நிறுவன ஊழியர்கள் எவரும் பங்குபற்ற முடியாது.

போட்டிக்கான ஆக்கங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:- நமது ஈழநாடு - 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## விசேட சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

தொண்டமனாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தின் உற்சவகாலத்தில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் விசேட சொற்பொழிவுகள் நடைபெறவுள்ளன.

இன்று காலை 10 மணிக்கு 'முருகனின் செயற்பாடு' என்ற பொருளில் சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராஜக் குருக்கள் சொற்பொழிவாற்றவுள்ளார்.

## முற்ற வெளியில் எறிகணை மீட்பு!

முற்றவெளிப் பகுதியில் வெடிக்காத நிலையிலிருந்த எறிகணை ஒன்று அப்பகுதியிலிருந்து நேற்று மீட்கப்பட்டது.

முற்றவெளிப் பகுதியில் சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் வெடிக்காத நிலையிலிருந்த எறிகணையை கண்டுள்ளனர்.

இதுபற்றி உடனடியாக யாழ். நகரபடை அதிகாரிக்கு தெரியப்படுத்தப்பட்டதையடுத்து அப்பகுதிக்குச் சென்ற படையினர் அதனை செயலிழக்கச் செய்து அவற்றினை மீட்டனர். (206)


## சிறுவிளம்பரம்

### சேவை

ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்ல விண்ணப்பிக்கும் உங்களுக்கு, ஆவணங்கள் சரிபார்த்துக் கொடுக்கப்படும், விண்ணப்பப்படிவங்கள் பூர்த்தி செய்து கொடுக்கப்படும், ஆலோசனைகள் வழங்கப்படும், அத்துடன் உலகின் எந்தப் பாகத்துக்கும் குறைந்த விலையில் விமான ரிக்கட்டுகள், பொதிசேவைகள், தங்குமிட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

தொடர்பு கொண்டு நேரத்தை ஒதுக்கவும். திருமதி ரேலங்கி செல்வராஜா,

No.344 காலி வீதி, கொழும்பு - 04. T.P-011 2504665.

**நாகம்ஸ்** சுன்னாகம்



ஷியாம், திரிஷா, மாதவன், விவேக் நடித்த

**லேசா லேசா**

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

வெள்ளி முதல் அன்பு சகோதரன்

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

அர்ஜுன், ரேவதி, நடித்த

**சுபாஷ்**

காட்சி நேரம்:11.00. 2.45. 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

ROAD TRIP

(சி-2723)

**ராஜா** யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

கமல், சினேகா, பிரபு நடித்த

**வசூல்ராஜா MBBS**

ரிக்கட் முற்பதிவு செய்துகொள்ளலாம்

காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

(சி-2725)

# தாய் மண்ணில் சுதந்திரமாக வாழ்வதற்காகவே இடைக்கால நிர்வாகத்தைக் கோருகின்றோம்!

## அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்



இடைக்கால நிர்வாகத்தைப் புலிகள் கோருவது தாய்மண்ணில் சுதந்திரமாக வாழ்வதற்கேதவிர வேறு எவற்றுக்காகவும் அல்ல. இதனை சிங்கள மக்களுக்குத் தெளிவுபடுத்திச் சொல்லுங்கள். அத்துடன், இந்த நாட்டில் வாழும் சிங்கள மக்களை எதிரிகளாகவோ, வேறு இனமாகவோ நாங்கள் பார்க்கவில்லை. நாங்கள் அவர்களுடன் சகோதர மனப்பான்மையோடு ஒன்றாக வாழ்வதையே விரும்புகிறோம் என அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

சிங்களப் பத்திரிகையொன்றுக்கு வழங்கிய பேட்டியொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாக ஆலோசனை மூலம் நாட்டைப் பிரிப்பதாகவும், அது வேறொரு நாட்டை உருவாக்குவதன் பொருட்டு வழங்கப்பட்ட ஒன்று எனவும், தெற்கிலுள்ள சில ஊடகங்களும் அரசியல்வாதிகளும் கூறுகின்றார்கள்.

எங்களுக்குப் பிரியவேண்டிய தேவை உண்டென்றால் பேச்சுவார்த்தை நடத்தவேண்டிய அவசியம் இல்லை. பேச்சுவார்த்தை நடத்தவேண்டியது பிரிந்து செல்வதற்காக அல்ல, ஒன்றாக இருப்பதற்காகவே. பிரிந்து செல்லவேண்டிய தேவை உண்டென்றால் பேச்சுவார்த்தை நடத்தவேண்டியது எதற்கு? என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

மீண்டும் யுத்தம் ஏற்படுமா என்று கேட்கப்பட்ட வினாவுக்குப் பதிலளிக்கையில் -

யுத்தமொன்று ஏற்படுமென்றால் அதனை முதலில் ஆரம்பிப்பது நாங்களல்ல, நாங்கள் மென்மேலும் சமாதானத்துக்காக அர்ப்பணிப்புடனேயே இருக்கின்றோம். ஆனால், மீண்டும் எங்களை யுத்தத்துக்குக் கொண்டு சென்றால் நாங்கள் செய்வதற்கு ஒன்றுமில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தே)

# எரிபொருள் விநியோகம் வழமைக்கு திரும்பியது!

கொழும்பைச் சூழவுள்ள பகுதிகளில் எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் தற்போது வழமைக்குத் திரும்பிவருவதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜாலிய மெதகம தெரிவித்தார்.

எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் - நேற்றுமுன்தினம் காலை முதல் வழமைக்குத் திரும்பும் என எதிர்பார்த்தபோதிலும், சில காரணங்களால் தாமதமடைந்ததாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்க கூட்டு சம்மேளனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

எரிபொருள் விலை அதிகரிப்புக்கு முன்பதாகக் கூறப்பட்ட கேள்விகளுக்கான புதிய விலைப்பட்டியல் தயாரிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதமே இதற்கான காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் எரிபொருட்களின் விலையை அரசாங்கம் அதிகரித்ததன் காரணமாக கேள்வி கோரல்களில் - பழைய விலைகளின்படியே, விலை நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது.

நேற்றுமுன்தினம் விடுமுறை தினம் என்பதால் குறிப்பிட்ட ஊழியர்களை விசேடமாக வரவழைத்து மாற்றம் செய்வதற்கு தாமதமேற்படும் என்று கூறப்படுகிறது.

கொலன்னாவ பெற்றோலிய ஊழியர்களின் வேலைநிறுத்தத்தால் கடந்த சனிக்கிழமை பெற்றோல் விநியோகப் பணிகள் பாதிக்கப்பட்டதுடன், போக்குவரத்தும் ஸ்தம்பிதமடையும் நிலை ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஜாதிக ஹெல உறுமய எம்.பிக்கள் ஜெனிவாவுக்குச் செல்லத் திட்டம்!

(கொழும்பு)

கட்டாய மதமாற்றத்தைத் தடைசெய்வதற்கான பிரேரணைக்கு எதிராக சர்வதேச மனித உரிமைகள் நிறுவனத்திடம் செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகள் குறித்து விளக்கமளிப்பதற்காக, ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள்குழு ஜெனீவா செல்லத் தயாராகின்றது.

ஜாதிகஹெல உறுமயவின் உறுப்பினர்கள் அண்மையில் கட்டாய மதமாற்றத்திற்கு எதிரான பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தனர்.

இதனையடுத்து, அந்தப் பிரேரணைக்கு எதிராகப் பல்வேறு அமைப்புக்கள் உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தன.

அதே நேரம் ஜாதிகஹெல உறுமயவும் தமது பிரேரணைக்கு சட்ட அங்கீகாரம் கோரி உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தது.

இதன் அடிப்படையில் உயர் நீதிமன்றம் தமது இரகசிய தீர்ப்பை தற்சமயம் ஜனாதிபதிக்கும், சபாநாயகருக்கும் அறிவித்துள்ளது.

இதனையடுத்து, சபாநாயகர் உயர் நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வின்போது வெளிப்படுத்தவுள்ளார்.

இதற்கிடையில் இந்தக் கட்டாய மதமாற்றப் பிரேரணை - அடிப்படை உரிமைமீறல் எனக் கூறி, பிரேரணைக்கு எதிரான சில அமைப்புகள் சர்வதேச மனிதஉரிமைகள் நிறுவனத்திடம் முறைப்பாடு செய்துள்ளன.

எனவே, அந்த முறைப்பாட்டுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே தாம் ஜெனீவா சென்று மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் தமது நியாயத்தைத் தெளிவுபடுத்தப் போவதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது. (01)

# வெலிக்கடை சிறையிலிருந்து அறுபது 'செல்போன்'கள் மீட்பு!

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள் இடம்பெற்ற சோதனை நடவடிக்கைகளின்போது, அறுபதுக்கும் மேற்பட்ட செலூலர் போன்கள் சிறைச்சாலை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன.

கடந்த மூன்று மாத காலமாக இந்தச் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றதாக, சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் நூர்தீன் மசூக் தெரிவித்தார்.

செல்போன்கள் மிகவும் நுட்பமான முறையில் சிறைச்சாலைக்குள் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்துடன் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் தொடர்புபட்டிருந்தால் அவர்களுக்கெதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சிறைச்சாலை ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

## ஞாயிற்றுக்கிழமைகளில் ரியூசனை

# தடைசெய்வதற்கான சட்டமூலம் தயாரிக்கும் பணிகள் ஆரம்பம்!

ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் கல்விநிறுவனங்களில் வகுப்புக்களை நடத்துவதை தடைசெய்வதற்கான சட்டத்தை உருவாக்கும் பொறுப்பை அமைச்சரவை சட்டவாக்கல் திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளது.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர

நாட்டில்- சமயக் கல்வியை வளர்ப்பதற்கும் மாணவர்கள் மத்தியில் நல்லொழுக்க சிந்தனைகளை வளர்ப்பதற்குமாகவே ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 6 மணி முதல் நண்பகல் 12 மணிவரை வகுப்புக்கள் நடத்தப்படுவதைத் தடைசெய்ய எண்ணியுள்ளோம்.

இதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைக்கவேண்டும் இதற்கான சட்டத்தை ஆக்குவதற்கான பொறுப்பு சட்டவாக்கல் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

## கைதானவர்களை 24 மணி நேரத்துக்குள்

# நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும் சட்டம் மாற்றப்பட வேண்டும்!

## குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி வேண்டுகோள்

பொலிஸாரால் கைதுசெய்யப்படுபவர்களை 24 மணித்தியாலங்களுக்குள் நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டுமென்ற சட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டுமென, குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி சரத் லூகொட வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தச் சட்டத்தின் காரணமாக சந்தேக நபர்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் இல்லாத நிலையிலேயே விசாரணைகளை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகிறது.

இந்த நேர அளவு நீடிக்கப்படுமாக இருந்தால், இலங்கையில் இடம்பெற்றுவரும் குற்றச்செயல்களைப் பெருமளவில் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்குமெனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், நவீனரக ஆயுதங்கள் சகிதம் தற்போது இடம்பெற்றுவரும் கொலைகள் அதிகரித்துவருகிறது.

இதேவேளை, பொலிஸாரினால் வெளியிடப்பட்ட தகவல்களின்படி, கடந்த ஆறு மாதங்களில் மட்டும் சுமார் 35 படுகொலைகளும், 88 வாகனத் திருட்டுக்களும், 27 ஆயுதமுனையிலான கொள்ளைகளும், 16 ஆட்கடத்தல்களும், 23 பாதாள உலகக் கோஷ்டிக் கொலைகளும் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கூட்டணி அரசுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்குத் தயார்

## ஹெல உறுமய தெரிவிப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி, அரசாங்கத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவதற்கு தமது கட்சி தயாராக இருந்த போதிலும், அரசாங்கம் தொடர்ந்தும் இழுத்தடிப்புச் செய்வதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

நிபந்தனைகளுடன் ஆதரவு வழங்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட வருமாறு தாம் அரசாங்கத்துக்கு அழைப்பு விடுத்துள்ளதாகவும், ஆனால், இந்த அழைப்புக்கு உரிய முறையில் பதிலளிப்பதற்கு அரசாங்கம் காலம் தாழ்த்தி வருவதாகவும் ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச்செயலாளர் உடுவே தம்மலோக தேரர் தெரிவித்தார்.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக அரசாங்கத்தின் சில அமைச்சர்கள் சிலர் தம்முடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ள போதிலும், இதுதொடர்பாக உத்தியோகபூர்வ முடிவுகள் இன்னமும் தமக்கு அறிவிக்கப்படவில்லை.

அரசாங்கத்தைக் கவிழ்க்கும் எந்தவிதமான நடவடிக்கைகளுக்கும் தமது கட்சி ஆதரவளிக்காது எனவும் தெரிவீத்துள்ள அவர், கடந்த பொதுத்தேர்தல் முடிவடைந்த பின்னர் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற இரண்டு சந்திப்புக்களிலும் இந்த முடிவினைத் தருமாறு கோரியிருந்தோம்.

இதேவேளை, ஜாதிக ஹெல உறுமயவுடன் அரசாங்கம் இணைந்து செயற்படுவது தொடர்பாக அரசாங்கத்துள் அங்கம் வகிக்கும் சிலர் எதிர்ப்புத் தெரிவித்து வருவதாகவும் உடுவே தம்மலோக தேரர் மேலும் தெரிவித்தார்.

# இலகு தவணைக் கொடுப்பனவில் எம்.பிக்களுக்கு வாகனங்கள்!

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இலகு தவணைக் கொடுப்பனவுகளில் வாகனங்களை இறக்குமதி செய்து வழங்க அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளது.

இந்தத் தகவலை நாடாளுமன்ற விவகார அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோ வெளியிட்டார்.

ஏற்கனவே, இலங்கைக்கு சட்ட விரோதமாகக் கொண்டுவரப்பட்ட நிலையில் சுங்கப் பகுதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் ஆயிரம் வாகனங்களிலும் - நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்குரிய வாகனங்களைத் தெரிவுசெய்யலாம் எனவும் அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ தெரிவித்தார். (01)



தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரதோற்சவமும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.



100 மீற்றர் நீச்சலில் தங்கம் வென்ற ஜப்பானிய வீரர் கொசுகி கிராஜிமா.






56 கிலோ பிரிவு பளு தூக்குதலில் தங்கம் வென்ற துருக்கிய வீரர் ஹலிஸ் முட்லு.



ஜூடோ 66 கிலோ பிரிவில் தங்கம் வென்ற ஜப்பானிய வீரர் மசாரோ உசிஷபா.



400 மீற்றர் தொடர் நீச்சலில் தங்கம் வென்ற தென்னாபிரிக்க வீரர்கள்.



400 மீற்றர் தொடர் நீச்சலில் தங்கம் வென்ற அவுஸ்ரேலிய மகளிர்.



பளு தூக்குதலில் தங்கம் வென்ற தாய்லாந்து வீராங்கனை ஹடாம்பொன் பொல்சக்.



துப்பாக்கி சுடுதல் போட்டியில் தங்கம் வென்ற அவுஸ்ரேலிய வீராங்கனை சுசானே பலோ. (நடுவில்)



100 மீற்றர் பட்டர்பிளை நீச்சலில் தங்கம் வென்ற அவுஸ்ரேலிய வீராங்கனை பெட்ரியா தோமஸ்.

# 400 மீற்றர் பிரீஸ்டைஸ் தொடர் நீச்சல் அவுஸ்ரேலிய மகளிர் உலக சாதனை!

(ஏதென்ஸ்)

ஒலிம்பிக் 400 மீற்றர் பிரீஸ்டைஸ் தொடர் நீச்சல் போட்டியில், உலக சாதனையுடன் அவுஸ்ரேலிய மகளிர் தங்கப் பதக்கம் வென்றனர்.

முதல் நாள் நடைபெற்ற நீச்சல் போட்டிகளின் கடைசிப் போட்டியாக், மகளிருக்கான 400 மீற்றர் பிரீஸ்டைஸ் நீச்சல் நடைபெற்றது.

அதில், அவுஸ்ரேலிய மகளிர் குழுவினர் மூன்று நிமிடம் 35.94 வினாடிகளில் இலக்கை எட்டி புதிய உலகசாதனை படைத்தனர்.

400 மீற்றர் பிரீஸ்டைஸ் போட்டியில் உலக சாதனையைத் தக்கவைத்துக்கொண்டுள்ள அலைஸ் மில்ஸ், லிபி லெண்டன், பெட்ரியா தோமஸ், டோடி ஹென்றி ஆகியோர் அவுஸ்ரேலியக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

பெர்லினில் 2002 இல் நடைபெற்ற போட்டியில் ஜேர்மன் குழுவினர் 3:36.00 வினாடிகளில் இலக்கை எட்டியிருந்ததே, இதற்கு முன்னர் உள்ள உலகசாதனையாக இருந்தது.

உலக சாதனையைத் தவிர, 1956 க்குப் பிறகு இந்தப் பிரிவில் தங்கம் வெல்லும் அவுஸ்ரேலியக் குழு என்ற சிறப்பும் இந்தக் குழுவுக்கு கிடைத்துள்ளது.

இதுவரை நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் அவுஸ்ரேலியா ஐந்து தங்கப் பதக்கங்களை சுவிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஹொக்கி பிரிவில்

# நியூஸிலாந்துடனான முதல்போட்டி அவுஸ்ரேலிய அணி வெற்றி!



ஏதென்ஸ் ஒலம்பிக்கில் ஹொக்கிப் பிரிவில் தங்கம் வெல்லாத குறையைப் போக்க முனைந்துள்ள அவுஸ்ரேலியா ஹொக்கி அணி, தனது முதல் லீக் ஆட்டத்தில் நியூஸிலாந்தை 4-1 என்ற கணக்கில் தோற்கடித்தது.

ஏதென்ஸில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் அவுஸ்ரேலிய வீரர்கள் ஆட்டம் முழுவதும் ஆதிக்கம் செலுத்தினர். அந்த அணி வீரர் டேமி டிவையர் அபாரமாக ஆடி மூன்று கோல்களை அடித்தார். மற்றொரு கோலை நட்சத்திர வீரர் டிராய் எல்டர் 'டிராக்பிளிக்' செய்து பெற்றார்.

ஆட்டத்தின் கடைசி நேரத்தில் நியூஸிலாந்து வீரர்கள் சிறப்பாக ஆடி கோலடிப்பதற்கான சில வாய்புக்களை உருவாக்கினர். ஆனால், அவுஸ்ரேலிய தற்காப்பு வீரர்கள் கடினமாக முயன்று அதை முறியடித்துவிட்டனர். கிடைத்த 3 பெனால்டி வாய்ப்புக்களில் ஒன்றை மட்டும் கோலாக்கி நியூஸிலாந்து வீரர்கள் ஆறுதல் தேடிக்கொண்டனர்.

# உதைபந்தாட்டப் போட்டியில் காலிறுதிக்குள் ஆர்ஜென்ரீனா!



ஏதென்ஸ் ஒலிம்பிக் கால்பந்துப் போட்டி லீக் சுற்றுக்கள் தற்போது நடந்து வருகின்றன.

'சி' பிரிவில் கடந்த சனிக்கிழமை நடந்த போட்டியில் ஆர்ஜென்ரீன - டுனிஷிய அணிகள் மோதின.

இந்தப் போட்டியில் ஆர்ஜென்ரீனா 2-0 என்ற கோல்கணக்கில் சுலபமாக வென்றது. முதற்பாதியில் ஆஸகர் டெவெஸ் இரண்டாவது பாதியில் சேவியர் சாவியலா ஆகியோர் கோல் அடித்தனர்.

இந்த வெற்றி மூலம் காலிறுதிக்கு ஆர்ஜென்ரீனா தகுதி பெற்றது.

முதல் ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனா 6-0 என்ற கோல் கணக்கில் சேர்பியாவை வீழ்த்தியது.

தற்போது இந்தப் பிரிவில் முதலிடம் பிடித்துள்ளது. இன்று அவுஸ்ரேலிய அணிக்கு எதிரான போட்டியின் முடிவு ஆர்ஜென்ரீனாவுக்கு எந்தப்பாதிப்பையும் ஏற்படுத்தாது. மற்றொரு போட்டியில் தென்கொரியா 1-0 என்ற கோல் கணக்கில் மெக்சிக்கோவை வென்றது. இந்த வெற்றி மூலம் காலிறுதிக்கான தனது வாய்ப்பை தென்கொரியா திடப்படுத்திக்

## மேற்கிந்தியத் தீவுகளுடனான டெஸ்ட்

# இங்கிலாந்து வெற்றி பெறுவதற்கு 23! ஓட்டங்கள் எடுக்க வேண்டும்



இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையில் ஓல்ட்ரபோட் மைதானத்தில் நடைபெற்று வரும் மூன்றாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாவது இனிங்ஸில் மேற்கிந்தியத் தீவுகள் அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றது.

முன்னதாக இங்கிலாந்து அணி தனது முதலாவது இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 330 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இவ்வணி சார்பாக ஸ்ரார‌ஸ் 90, தோர்ப் 114, ஹோகாட் 23 ஓட்டங்களை கூடுதலாகப் பெற்றனர். உதிரிகளாக மேற்கிந்தியத் தீவுகள் அணி 47 ஓட்டங்களை விட்டுக் கொடுத்திருந்தது.

பந்துவீச்சில் பிராவோ 6, கொலிமோர் 2, எட்வேட்ஸ், கொலின்ஸ் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதன்பின்னர் தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த மேற்கிந்திய தீவுகள் அணியில் இருவரைத் தவிர மற்றைய அனைவரும் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.



இதில் ஆரம்ப வீரர் கைல் 42, சர்வான் 60 ஓட்டங்களைக் கூடுதலாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஹர்மிசன் 4, பினின்ரொப், ஜைல்ஸ் இருவரும் தலா மூன்று விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.



மேற்கிந்தியத்தீவுகள் அணி தனது முதல் இனிங்ஸில் 9 விக்கெட்டுக்களை இழந்து 395 ஓட்டங்களை எடுத்த நிலையில் தனது ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்ததும் குறிப்பிடத்தக்கது.

இதன்பின்னர் தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி நான்காம் நாள் ஆட்ட நேரமுடிவில் விக்கெட் இழப்பின்றி நான்கு ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இதில் ட்ரெஸ் கோதிக் நான்கு ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.




# வெற்றியுடன் ஆரம்பத்தை தொடக்கினார் வீனஸ்

ஒலிம்பிக் பெண்கள் ரெனிஸ் தற்போதைய சம்பியன் வீனஸ வில்லியம்ஸ், வெற்றியுடன் இந்த ஒலிம்பிக் போட்டியைத் தொடங்குகிறார். ஏதென்ஸ் பிரதான அரங்கில் நேற்று முன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் ரெனிஸ் போட்டியில் தற்போதைய சம்பியன் வீராங்கனையான, அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் - ஹங்கேரியின் மெலின்டா ஜின்க் மோதினர். இந்தப் போட்டியை 6-1, 6-2 என்ற நேர் செட்டுகளில் வீனஸ் வெறும் 57 நிமிடங்களில் வென்று அடுத்த சுற்றுக்குள் நுழைந்தார். தரவரிசையில் முதலிடம் வகிக்கும், பெல்ஜியம் வீராங்கனை ஜஸ்டின் ஹெனினை காலிறுதியில் வீனஸ் சந்திப்பார்.

# பெண்கள் உதைபந்தாட்டம் காலிறுதியில் அமெரிக்கா!

ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில், பெண்களுக்கான கால்பந்துப் போட்டிகள் நடக்கின்றன. முதற்போட்டியில் அமெரிக்கா 3-0 என்ற கோல்கணக்கில் கிரீஸ் அணியை வென்றது.

கடந்த சனிக்கிழமை இரண்டாவது போட்டி நடந்தது. இந்தப் போட்டியில் பிரேஸிலை வீழ்த்தி, காலிறுதிக்குள் நுழைந்தது அமெரிக்கா.

# முள்ளியான் மத்திய மருந்தகம் இயங்காததால் நோயாளர் சிரமம்

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கிழக்கெல்லையில் உள்ள வெற்றிலைக் கேணி முள்ளியான், போக்கறுப்பு, சுண்டிக்குளம் கிராம அலுவலர் பிரிவுகளில் குடியிருக்கும் - சுமார் 4 ஆயிரம் குடும்பங்களும், இந்தப் பிரதேசத்தில் கடற்தொழிலில் ஈடுபட்டிருக்கும் 1500 இற்கு மேற்பட்ட வெளியூர் கடற்தொழிலாளர்களும், நோயாளர்களும் சிகிச்சை பெறுவதில் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

இடப்பெயர்வுக்கு முன்னர் முள்ளியான் மத்திய மகாவித்தியாலயத்தில் கிகிச்சை பெற்று வந்த இந்தப் பிரதேச மக்கள் - அண்மையில் இராணுவ நடவடிக்கையின்போது முள்ளியான் மத்திய மருந்தகம் முற்றாக அழிக்கப்பட்டுள்ளமையால், நோயாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

மீளக்குடியமர்ந்த மக்கள் மருத்துவ உதவி பெறுவதற்கு சுமார் 8 தொடக்கம் 20 கிலோமீற்றர் தூரத்திலுள்ள ஆழியவளை திலீபன் மருத்துவமனைக்கும், மருதங்கேணியில் அமைந்துள்ள அரசாங்க மருந்தகத்துக்கும் செல்லவேண்டியுள்ளது. (21)

## விளையாட்டு வீரர்கள் கௌரவிப்பு

கொரியாவில் அண்மையில் இடம்பெற்ற பதினெட்டு வயதுக்குட்பட்ட மாணவருக்கான மெய்வன்மைப் போட்டியில், யாழ். மாவட்டத்திலிருந்து சென்ற மூன்று வீரர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு - இன்று மாலை 4 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ரிக்கோ உணவகத்தின் அனுசரணையுடன் யாழ். மெய்வல்லுநர் சங்கத்தினால் இந்த கௌரவிப்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில், விளையாட்டுத்துறை ஆர்வலர்களைக் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (தீ)

## இலவச கணினி வகுப்பு

நெடுந்தீவுப் பிரதேச பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கணினிப் பயிற்சி வகுப்புகள் - கடந்த திங்கள் முதல் வெள்ளிவரை நெடுந்தீவுக் கோட்டக்கல்விப் பணிமனையின் ஆதரவில் - நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் நடத்தப்பட்டது.

லண்டனில் வசிக்கும் யாழ். கல்வியங்காட்டுப் பகுதியைச் சேர்ந்த எஸ்.சிவகுருநாதபிள்ளை என்பவரே இலவசமாக இந்தப் பயிற்சி வகுப்பை நடத்தினார். (113)

## செம்பியன்பற்று உப அலுவலகம் விரைவில் திறக்கப்படும்

பருத்தித்துறை பிரதேசசபையின் செம்பியன்பற்று உப அலுவலக கட்டட வேலைகள் முடிவுவடையும் நிலையிலுள்ளன.

புதுக்காடு - தாளையடி பிரதான வீதியில் உள்ள உப அலுவலகம், நூல் நிலையம் என்பன இயங்குவதன் மூலம் பொதுமக்களும், பாடசாலை மாணவர்களும் நன்மையடைவர்.

இந்தப் பிரதேசத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது உபஅலுவலகக் கட்டடம், நூல் நிலையம், பழைய கிராம சபைக்கட்டடம் என்பன முற்றாகச் சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (21)

## வீதிப் புனரமைப்புக்கு அனுமதி கோரி கடிதம்

(சுதுமலை)

மானிப்பாய் பிரதேசசபைக்குட்பட்ட வீதிகளை 2005 ஆம் ஆண்டில் புனரமைப்பதற்கு முன்மொழியப்பட்டு, அனுமதிகோரி உரியவர்களிடம் கடிதமூலமாகக் கேட்கப்பட்டுள்ளது.

வடலித் தோட்டம் வீதி, வடலியடைப்பு - சங்கானை ஆஸ்பத்திரி வீதி, மாதகல் இராசாத்தி வீதி, நவாலி குதனை வீதி, மானிப்பாய் மெமோறியல் ஒழுங்கை, சுதுமலை மடத்தடி வீதி, பண்டத்தரிப்பு சேனக்கட்டு வீதி, மானிப்பாய் முனாஸ் வீதி ஆகிய எட்டு வீதிகளையும் புனரமைப்பதற்கென, வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி ஆணையாளர் தெ.து.விஜயலட்சுமி, பிராந்திய உளளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா ஆகியோருக்கு முன்மொழிவு அனுமதிக் கடிதங்கள் அனுப்பி வைத்துள்ளார்.

உரிய காலத்தில் உரியவர்களிடமிருந்து அனுமதி பெறப்பட்டால், 2005 ஆம் ஆண்டு இந்த வீதிகள் புனரமைக்கப்படும் என வலி.தென்மேற்குப் பிரதேசசபை உதவியாளர் தெரிவித்தார். (91)

## மலேரியா தடை மருந்து விசுறும் பணி ஆரம்பம்

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில், மாமுனை தொடக்கம் போக்கறுப்பு வரையுள்ள சகல கிராமங்களின் வீடுகளுக்கும் - "டெல்ராமற்றின்" மருந்து விசிறும் பணியில் மலேரியாத் தடை இயக்க ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். அதன் மூலம் நுளம்புக் தொல்லை குறைந்து காணப்படுகிறது.

இதைவிட, இந்தப் பிரதேசத்தில் நீர் தேங்கியுள்ள சிறிய குளங்கள், துரவுகள், சிறிய பள்ளங்களில் நுளம்புக் குடம்பிகளை அழிப்பதற்கு, 'அபெற்' மருந்து விசிறும் பணிகளிலும் மலேரியாத்தடை இயக்க ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். (21)

## வெள்ளைமாவடிப் பிள்ளையார் மஹோற்சவம்

மீசாலை திருநிலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலய மஹோற்சவம் - எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

திருவிழாக்காலங்களில் தினமும் இரவு சைவப்புலவர் சி.கா.கமலநாதன்- தேவியின் மகிமைகள் எனும் தலைப்பில் தொடர் சொற்பொழிவாற்றவுள்ளார். (24)

## வருடாந்த உற்சவம்

தம்பசிட்டி மாயக்கைப் பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் - எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இதனைத் தொடர்ந்து தேர்த்திருவிழா 28 ஆம் திகதி சனிக்கிழமையும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (14)

## நிலத்தடி நீர் மாசடைவதை தடுக்க இயற்கைப் பசளை பயன்படுத்தவேண்டும்

யாழ்குடாநாட்டில் தற்போது நிலத்தடி நீர் மாசடைந்து வருவதற்கு செயற்கைப் பசளைகளே காரணம் என்று அண்மையில் வலிகாமம் தென் மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெற்றபோது, அதில் கலந்துகொண்ட பிரதேச செயலர் சுப்பிரமணியசர்மா தெரிவித்தார்.

எமது பிரதேசத்தில் நிலத்தடி நீர் வெகுவிரைவாகப் மாசடைந்து வரும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

எனவே, இந்த நிலத்தடி நீரை நன்னீராக மாற்ற வேண்டுமாயின், இரசாயன வளமாக்கிகளை (யூரியா) பாவிப்பதை எமது விவசாயிகள் குறைத்து, இயற்கைப் பசளை வகைகளைப் பாவிக்கவேண்டும்.

இந்த நடவடிக்கைக்கு விவசாயிகள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (100)

## நாடு திரும்பும் சத்திர சிகிச்சை நிபுணருக்கு பிரிவுபசார நிகழ்வு

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை நிபுணராகக் கடந்த ஒரு வருடகாலமாக கடமையாற்றி, நாடுதிரும்பும் சத்திர சிகிச்சை நிபுணர் வரோனிக்கிற்கு மந்திகை ஆதார வைத்தியசாலை சத்திரசிகிச்சைக்கூட தாதிமார்கள் மற்றும் ஊழியர்கள் - மாவட்ட வைத்திய அதிகாரி தலைமையில் பிரிவுபசார நிகழ்வொன்றை அண்மையில் நடத்தினர்.

இதில் நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் வைத்தியர்கள், தாதிமார்கள், ஊழியர்கள் பலரும் கலந்துகொண்டு அவரின் சேவையைப் பாராட்டினர்.

இவர் போர்க்காலங்களில் சேவையாற்றிய எம்.எஸ்.எப் குழுவில் பணியாற்றி, பின்னர் அந்தக் குழு யாழ்ப்பாணத்தை விட்டுச் சென்றபின் அதிலிருந்து விலகி, உலக சுகாதார ஸ்தாபனத்தின் நிதியுதவியுடன் கடந்த ஒரு வருடகாலமாக் சேவையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (14)

## கல்வி முகாமைத்துவ பட்டப்பின் டிப்ளோமா கற்கை நெறி

(யாழ்ப்பாணம்)

இலங்கை கல்வி நிர்வாகசேவை, இலங்கை கல்வியியலாளர் சேவை, இலங்கை அதிபர் சேவை போன்ற சேவைகளைச் சேர்ந்தவர்களிடமிருந்து - கல்வி முகாமைத்துவ பட்டப்பின் டிப்ளோமா கற்கைநெறிக்கான 2004/2005 கல்வியாண்டுக்குரிய பயிற்சியாளர்களை அனுமதிப்பதற்காக தேசிய கல்வி நிறுவகப் பணிப்பாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பயிற்சிநெறிக்கான அனுமதிகள், எழுத்துப் பரீட்சைகள், நேர்முகப் பரீட்சை என்பவற்றின் அடிப்படையில் இடம்பெறும்.

முழுநேர வதிவிடக் கற்கைநெறியான இது - தேசிய கல்வி நிறுவகத்தின் முகாமைத்துவ வாண்மை அபிவிருத்தி நிலையத்தின், முகாமைத்துவ வாண்மை அபிவிருத்தி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிநெறிக்கான விண்ணப்பங்கள் யாவும் செப்ரெம்பர் 9 ஆம் திகதிக்கு முன்பாக - தேசிய கல்வி நிறுவகத்துக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும் எனக் கேட்கப் பட்டுள்ளது. (31)



வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி தேவஸ்தானத்தினால் நடாத்தப்பட்டு வருகின்ற கணினிப் பயிற்சிநெறியில் பயின்று, பரீட்சையில் சித்தியடைந்த முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பிரம்மஸ்ரீ ச.க.சுதர்சன குருக்கள் மாணவி ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதைக் காணலாம். (17)



ஆறுகால்மடம் அறிவொளி முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டுப்போட்டியில் கலந்துகொண்ட அரசியற்துறை உறுப்பினர் செழியன் மங்கள விளக்கேற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படத்தில் காணலாம். (91)

## மணவாளக்கோல விழா

நுணாவில் மேற்கு சாவகச்சேரி கொல்லங்கிராய் அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய மாணவாளக் கோல விழா - எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 8 மணிக்கு இடம்பெறும்.

அன்றையதினம் நவோந்தரசத சங்காபிசேகம், ஊஞ்சல், அன்னதானம் என்பன இடம்பெறும். (24)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : ச.சிந்துஜா
முகவரி : இன்பர்சிட்டி.



வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்


## சின்னஞ்சிறு செய்திகள்

### மஹா கும்பாபிஷேகம்

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை - கல்லுண்டாய் நரசிங்க வைரவர் ஆலயத்தின் சம்பு நோஷன அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

பிரதமகுரு சிவஸ்ரீ ந.கேதீஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் - அடியார்கள் ஆசார சீலர்களாக வருகைதந்து, வைரவப் பெருமானின் திருவருள் பெற்று உய்யும்படி ஆலய பரிபாலனசபையினர் கேட்டுள்ளனர். (100)

### கற்கோவளம் பாடசாலை வீதி திருத்தப்படவில்லை

(பருத்தித்துறை)

கற்கோவளம் பாடசாலை வீதி பல வருடங்களாக திருத்தப்படாமல், மிக மோசமான நிலையில் பாதிப்படைந்துள்ளது.

இது குறித்து பருத்தித்துறை பிரதேசசபையிடம் பல தடவை முறைபபாடு செய்தும், அவர்கள் எந்தவித நடவடிக்கையும் எடுக்க வில்லை.

இதனால் பாடசாலை மாணவர்கள், மீனவர்கள், அலுவலர்கள் எனப் பலர் இடையூறுகளை எதிர் நோக்குகின்றனர். (15)

### பழைய மாணவர்சங்க பொதுக்கூட்டம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் - எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில், கல்லூரி மண்டபத்தில் தலைவர் நடராஜசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது. (14)

### மாணவர்களை அனுமதிக்க புதிய சுற்றுநிருபம்

தரம் ஒன்று தொடக்கம் க.பொ.த. உயர்தரம் வரை மாணவர்களைப் பாடசாலைக்கு அனுமதித்தல் தொடர்பான புதிய சுற்றுநிருபம் - கல்வி அமைச்சினால் சகல கல்வி வலயங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதற்குமுன் அனுப்பி வைக்கப்பட்ட 23-05-2003 ஆம் திகதிய, 23/2003 இலக்கத்தையுடைய சுற்றுநிருபத்துக்கு மேலாக, இந்தச் சுற்றுநிருபம் கைநூல் வடிவில் தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

1-06-2004 இலும், அதன் பின்பும் (2005 ஜனவரி) பாடசாலைகளில் மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் போது, கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளடங்கிய கைநூல் வெளியிடப்பட்டுள்ளது. (101)




# இணையும் பறவைகள்

பராஸ்டிக் பறவைகள் இவ்வளவு காலமும் உணவுகளைப் பகிர்ந்தளிக்காது இருந்து வந்தன. சிலவேளைகளில் தங்களுடைய குஞ்சுகளுக்குக்கூட இவை உணவூட்டமாட்டாது. ஆனால், தற்போது இவை மற்றப்பறவைகளுக்கு உணவைப் பகிர்ந்தளிக்கின்றன.

கல்பேர்ட் என்கின்ற பறவைகள் கூடு முழுவதையும் உணவால் நிரப்பக்கூடியவை. இவை இடுகின்ற முட்டைகளும் மற்றையவற்றுடன் ஒப்பிடும்போது, பெரியனவாகக் காணப்படுகின்றன.



இந்த வகைப் பறவைகள் உண்ணுகின்ற உணவுவகைகள் மிகவும் அரியனவாகக் காணப்படுகின்றன. ஆனால், சோங் பறவைகள் முட்டையிட்டவுடன் உடனடியாகக் கூட்டைவிட்டுப் பறந்து செல்கின்றன. இதன் காரணமாக அந்த முட்டைகளுக்குப் பாதுகாப்பில்லை. மற்றைய பறவைகள் இந்த முட்டைகளை அடைகாக்கின்றன.

பறவைகளுக்கிடையே இதன காரணமாக ஒரு உறவு ஏற்படுகின்றது. இதைப்பற்றி றெபேக்கா கில்னர் என்பவர் கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தில் ஒரு ஆராய்ச்சி செய்துகொண்டுவருகின்றார்.

அவருடன் இணைந்து ஜோமாடன் என்பவரும் இந்தப் பறவைகளின் செயற்பாடுகள் பற்றி ஆராய்ந்து வருகின்றார்.

# சூப்பர் கணினி

2003 ஆம் ஆண்டில் இடம்பெற்ற விண்வெளி விபத்துக்குப்பிறகு நாசா விண்வெளி ஆய்வு மையம் எச்சரிக்கை அடையத் தொடங்கியுள்ளது.



தற்போது நாசா ஆய்வு மையத்தில் காணப்படுகின்ற கணினி அமைப்புக்கள் 10 மடங்காக வலுவூட்டப்பட்டிருக்கின்றன. அங்கே உலகின் மிகப்பெரிய வினுகஸ் கணினிகள் காணப்படுகின்றன. இங்கே காணப்படுகின்ற கணினிகள் 500 டெராபைட்கள் வலுக் கொண்டவை. இது உண்மையில் 800,000 சிடிக்களுக்குச் சமமானவை. விண்வெளிக் கலங்களுடன் இது பொருத்தப்படுகின்றது. வெடித்துச் சிதறிய கொலம்பியா விண்கலம்போன்று, தற்போது ஒன்று



வடிவமைக்கப்பட்டு வருகின்றது. இந்த விண்வெளிக்கலம் முற்று முழுதாகக் கணினிமயப்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்தக் கணினி 1000 ஜிகாபைட்ஸ் மெமறியைக் கொண்டிருக்கின்றது. 20x512 புரோசஸ் உண்டு. விண்கலத்திலேற்படுகின்ற எந்தவகை மாற்றங்களாயினும், இது உடனடியாகக் கண்டுபிடிக்கும் திறன் கொண்டது. இதேவேளை - இந்தவகைக் கணினிகளைத் தங்களுக்கும் தருமாறு அமெரிக்க இராணுவம் கேட்டுக் கொண்டிருக்கின்றது. இது இராணுவ ஆய்வுக்குப் பெரிதும் உதவியாக இருக்கும். இந்த சிஸ்டத்தின் பெறுமதி 160 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

# சிலந்தி தரும் நோய்

சிலந்திகளைப் பற்றி நாம் அதிகமாகக் கவலைப்படுவதில்லை. ஏனென்றால், அவை எமக்குத் தீங்கு பயப்பதில்லை என எண்ணுகின்றோம். ஆனால், இப்போது கிடைத்திருக்கின்ற தகவல்களின்படி சிலந்திகள் மிக மோசமான நோய்க் காவிகளாகத் தொழிற்படுகின்றன. அவுஸ்ரேலிய மற்றும் அமெரிக்க மருத்துவர்கள் இந்தச் சிலந்திகள் பல்வேறுபட்ட நோய்களைப் பரப்பக்கூடிய ஆற்றலைக் கொண்டிருப்பதாகக் கண்டறிந்திருக்கின்றார்கள்.



இதேவேளை- உலகிலே பல்வேறுபட்ட சிலந்தி இனங்கள் காணப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான நோய்களைப் பரப்புகின்றன. இவை தோலை உண்ணும் ஆற்றல் கொண்டவை. வூல்வ் இனத்தைக் கொண்ட சிலந்திகள் மற்றும் வெள்ளை வால் சிலந்திகள் பெருவாரியாக அவுஸ்ரேலியாவில் வசிக்கின்றன. தற்போது அவை அமெரிக்காவிலும் அடையாளம் காணப்பட்டிருக்கின்றன.

உண்மையில் சிலந்திகளைக் கண்டு பிடிப்பது கடினம். அவை மறைந்து வாழ்கின்றன. இவற்றின்மூலம் தோல் உண்ணி என்ற வியாதி உருவாக்கப்படுகின்றது. இதனுடைய கருத்து தோலானது தசைகளைச் சிறிது சிறிதாக இழத்தலாகும். இதேவேளை இந்த நோய்களுக்கு வேறு காரணங்கள் இருக்கலாம் எனவும் கூறப்படுகின்றது.

# பழையபடம் புதிய நிறம்

பழைய பொலிவூட் சினிமாப் படங்கள் தற்போது கலர்ப்படங்களாக மாற்றம் பெறத்தொடங்கியிருக்கின்றன. இதன்காரணமாகப் பழைய சினிமாப் படங்களுக்கு மதிப்பு அதிகம்.






இதேவேளை - மேற்கிந்தியச் சினிமாத் தயாரிப்பாளர்கள் பழைய திரைப் படங்களுக்கு கலர் அடிக்கத் தொடங்கியிருக்கின்றார்கள். 1957 ஆம் ஆண்டில் வெளிவந்த "நாயதவுர்" (புதிய தசாப்தம்) என்ற திரைப்படம் மற்றும் 1960 ஆம் ஆண்டில் வெளிவந்த "முகல ஈ அஸாம்" என்ற திரைப்படமும் இப்போது கணினி முறையில் கலர்ப் படங்களாக ஓடிக்கொண்டிருக்கின்றன. இரண்டும் சூப்பர் கதாநாயகன் திலிப்குமார் நடித்த படம். ஆனாலும், முகல் ஈ அஸாம் என்ற படம் மட்டுமே ரசிகர்களைக் கவர்ந்திருக்கின்றது. இந்தப் படத்தின் பாடல்




கள் டிஜிற்றல் ஒலிநயத்துடன் காணப்படுகின்றன. இவற்றை மீளப் பதிவுசெய்து வெளியிட்டிருக்கின்றார்கள் திரைப்படத் தயாரிப்பாளர்கள். இப்படிப் பழைய படங்களைத் தூசுதட்டி கலர் கலராக வெளியிடுவது, புதியபடங்களைத் தயாரிப் பதிலும் பார்க்க மலிவானது என்கிறார்கள் பொலிவூட் திரைபடத் தயாரிப்பாளர்கள். பொலிவூட்டிலே ஒரு வருடத்துக்கு ஏறக்குறைய 1000 படங்கள் தயாரிக்கப்படுகின்றன. அத்துடன், பழைய படங்களைச் சேர்த்தால் அதனுடைய எண்ணிக்கை அதிகரிக்கும் என்கிறார்கள் திரைப்படத் தயாரிப்பாளர்கள்.

# சிக்கலில் வயகரா

வயகரா மாத்திரைகள் வந்த வேகத்திலே மக்களைப் படாதபாடுபடுத்தி, ஒரு வழியாகச் சர்வதேசச் சந்தையைவிட்டுச் செல்லுகின்ற நிலையை அடைந்திருக்கின்றன.

வயகரா மாத்திரைகளைப் பாவிக்கத் தொடங்கியவர்கள் அதன்மூலம் கிடைக்கின்ற பக்க விளைவுகளால் தற்போது அவதிப்படத் தொடங்கியிருக்கின்றார்கள். பாலியல் உணர்ச்சிகள் செல்லுகின்ற வேகம், எல்லா மனிதர்களுக்கும் ஒரேமாதிரி அமைவதில்லை. அது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாகக் காணப்படுகின்றது. இந்த வயகரா மாத்திரைகள் பாலியல் உணர்வுகள் செல்லும் வேகத்தை அதிகரிக்கின்றது. இன்ரநெட் மூலம் வயகரா மாத்திரைகள் விளம்பரம் செய்யப்படுகின்றன. வயகரா மாத்திரைகள் சட்டபூர்வமற்ற முறையிலும் விற்பனை செய்யப்படுகின்றன.




இதேவேளை - இவை இன்ரநெட்டிலும் விளம்பரம் செய்யப்படுகின்றன. அமெரிக்க அரசாங்கத்தின் அங்கீகாரம் இருப்பதனால், வயகரா மாத்திரைகளை இலகுவில் தடைசெய்ய முடியாதிருக்கின்றது.

தற்போது இன்ரநெட்டில் செய்யப்படும் சட்டபூர்வமற்ற விளம்பரங்களைக் கண்டறிவதற்கு ஒரு புதியமுறை கையாளப்படுகின்றது. அது என்னவெனின், வயகரா என்ற ஆங்கிலச் சொல்லின் சொல் உச்சரிப்புக்கள் சட்டபூர்வமான வயகரா மாத்திரை விளம்பரங்களில் சரியாகவும், மற்றையவற்றில் பிழையாகவும் தெரியக்கூடியதாக இருக்கும்.

இது போலியை அடையாளம் காண உதவுகின்றது.

# திரை விமர்சனம்

## அழகிய தீயே



**வி**த்தியாசமான திரைப்படங்களில் அதிக நாட்டமுள்ள நடிகர்-தயாரிப்பாளர் பிரகாஷ்ராஜின் படம் இது. சமீபகாலமாக நடிகர்களை மட்டும் நம்பியே எடுக்கப்பட்ட வழக்கமான மசாலாப்படப் பாணி இதில் கொஞ்சம் குறைவாகவுள்ளது என்றே கூறலாம்.

பிரசன்னாவும் அவரது 3 தோழர்களும் சினிமாவில் சாதிக்கப் போராடிக்கொண்டிருக்கின்றார்கள். பணக்காரனாகிய பிரமிட் நடராஜன் தன்னுடைய மகள் நவ்யா நாயருக்கு வெளிநாட்டு மாப்பிள்ளை பிராகாஷ்ராஜை நிச்சயித்துக் கல்யாண ஏற்பாடுகளைச் செய்கின்றார். கல்யாணத்தில் நாட்டமில்லாத நவ்யா நாயர் திருமணத்தை நிறுத்தும்படி கேட்டு, அவருடைய தோழியின் அண்ணன் மூலம் பிரசன்னாவிடம் உதவிகேட்கப்படுகின்றது. பிரசன்னா பிரகாஷ்ராஜிடம் நவ்யா தன்னுடைய காதலி என்று பொய்சொல்கின்றார். முதலில் கோபப்பட்ட பிரகாஷ்ராஜ் பின்பு அவர்களை உண்மைக் காதலர்கள் என நினைத்துச் சேர்த்துவைக்கின்றார். அத்துடன் பதிவுத்திருமணம் செய்துவைக்கின்றார். அவர்கள் தொடர்ந்தும் சேர்ந்து வாழ்ந்தார்களா? அல்லது பிரிந்து சென்றார்களா? இதுதான் மீதிக்கதை. ஆரம்பத்தில் வருகின்ற படத்தின் சில காட்சிகள் எரிச்சலூட்டுகின்றன. பின்பு இயக்குநர் தன்னைச் சுதாரித்துக் கொள்கின்றார்.



படத்தில் ஒரு இரட்டை அர்த்தமோ அல்லது ஆபாசக் காட்சியோ இல்லாததற்கு இயக்குநர் ராதாமோகனைப் பாராட்டவேண்டும்.

பிரசன்னா தன்நடிப்பில் தனது திறமையை வெளிப்படுத்தியிருக்கின்றார். கொஞ்சநேரமே படத்தில் வந்திருந்தாலும், தனது பங்கைச் சிறப்பாகச் செய்திருக்கின்றார் பிரகாஷ்ராஜ்.

இசை ரமேஷ்வினயத். ஒளிப்பதிவு ஸ்ரீனிவாஸ் இரண்டுமே பரவாயில்லை. விஜியின் வசனம் நடைமுறைக்குப் பொருந்துவதாகவுள்ளது இது அழகிய 'தீ' தான். - **கலானந்தி.**

# ஆபிரிக்க சிங்கங்கள்

**தா**ன்சானிய நாட்டிலுள்ள சிங்கங்களுக்குக் கடந்த 40 வருடங்களாக ஒரு நோய் இருந்தது. அந்த நோய் தற்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. 1994 ஆம் ஆண்டுக்கும் 2001 ஆம் ஆண்டுக்கும் இடையே டிஸ்டெம்பர் எனும் வைரஸ் இந்தச் சிங்கங்களை அதிகமாகத் தாக்கியது கண்டுபிடிக்கப்பட்டது. ஆனாலும், 29 சிங்கங்கள் 1998 ஆம் ஆண்டளவில் இந்த நோயினால் பாரதூரமாக்கப்பட்டன. தான்சானியாவில் காணப்படுகின்ற கொறொங்கொரோ கிறேற்றர் 610 மீற்றர் ஆழமும் 260 சதுர கிலோ மீற்றர் பரப்பளவையும் கொண்டிருக்கின்றது.



இது கிழக்காபிரிக்க நாடுகளில் இருக்கின்ற காடுகளில் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது. இந்தக் காடுகளில் 1960 ஆம் ஆண்டளவில்தான் சிங்கங்கள் முதன்முதலில் கண்டறியப்பட்டன.

சிங்கங்களுக்கு இணையாக இங்கே காட்டெருமைகளும் காணப்படுகின்றன. டிஸ்டெம்பர் வைரஸ் நோய் - கூடுதலாக நாய்களுக்கும், பூனைகளுக்கும் மட்டுமே ஏற்படக்கூடியது. ஆனாலும், இந்த வகை நோய்கள் சிங்கங்களுக்கு வந்தது இதுதான் முதற்தடவை என்கின்றார்கள் வைத்தியர்கள்.

இந்த நோய்களுக்கு உடனடித்தீர்வு இல்லாவிட்டால், தன்சானியாவிலுள்ள அரிய இனச் சிங்கங்கள் மடிவது உறுதி.

# வெள்ளைக் காண்டாமிருகம்

**வெ**ள்ளைக் காண்டாமிருகங்கள் மிகவும் அரிதானவை. இவை ஆபிரிக்காவில் அதிகமாகக் காணப்படுகின்றன. மிகக் குறைவான தொகையில் காணப்பட்ட இந்தவகை மிருகங்கள் இப்போது வேட்டைக்காரர்களினால் அதிகமாக வேட்டையாடப்பட்டுக் கொண்டுவருகின்றன. கடந்த 14 மாதங்களில் 50 வீதமான காண்டாமிருகங்கள் மொத்தத் தொகையில் குறைந்துபோயிருக்கின்றன. உலகின் மிகப்பெரிய முலையூட்டி மிருகங்களும் இந்த வகையாகும். ஆபிரிக்காவின் கராம்பா பார்க்கில் இந்த மிருகங்கள் ஓரளவு காணப்படுகின்றன. இவை 23 வருடங்களாக அங்கே பராமரிக்கப்பட்டு வருகின்றன.



2003 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட கருத்துக் கணிப்பீட்டின்படி ஏறக்குறைய 30 காண்டாமிருகங்கள்தான் அந்தப் பார்க்கில் இருந்தன.



1970 ஆம் ஆண்டளவில் இந்தக் காண்டா மிருகங்கள் இருக்கின்றன என்று கூறப்பட்டது. அதன் பிறகுதான் கண்டறியப்பட்டது. 1895 ஆம் ஆண்டளவில் ஏறக்குறைய 11,000 வெண்காண்டாமிருகங்கள் இருந்தன என்று கூறப்படுகின்றது. ஆனாலும், கரிய கண்டாமிருகங்கள் பெருகிக் கொண்டே செல்கின்றன. அவற்றினுடைய எண்ணிக்கையுடன் ஒப்பிடுவதற்கு வெள்ளை இனக் காண்டாமிருகங்கள் மிகக்குறைவாகவே இருக்கின்றன.

# புதிய மீன்கள்

**ம**த்திய அத்திலாந்திக் கடலில் மிக அரிதான மீனினங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. கடந்த 10 வருடங்களாக எடுக்கப்பட்ட தரவுகளின்படி, அத்திலாந்திக் கடல் மலையடிவாரங்களில் காணப்படுகின்ற மீனினங்கள் அரிதானவை என்று கூறப்படுகின்றது. இதே வேளை - அங்கே 300 வகையான மீனினங்கள் கண்டறியப்பட்டிருக்கின்றன. அவற்றிலும் 50 வகையானவை ஆக்டோபஸ் இனத்தவை ஆகும். சிலவேளைகளில் இந்தவகை மீனினங்கள் மனித ஆராய்ச்சியாளர்களால் கண்டறியப்படவில்லை. கடலுக்கடியில் இயந்திர மனிதர்கள் அனுப்பப்பட்டு அவை மூலமும் பெருவாரியான மீனினங்கள் கண்டறியப்பட்டன. ஆனாலும், சிலவகை ஆராய்ச்சியாளர்களால் கட்டுபிடிக்கப் படாமல் மறைந்து வாழ்வதாகக் கருதப்படுகின்றது. அதிலும் மஞ்சள் மற்றும் சிவப்பு ஏஞ்சல் மீனினங்கள் மிகவும் அரிதானதாகவும், தேடலைத் தூண்டக்கூடியதாகவும் இருக்கின்றன. 2010 ஆம் ஆண்டளவில் மேலும் பல மீனினங்களைக் கண்டறியககூடிய வாய்ப்புக்கள் இருப்பதாகவும், இந்தவகைத் தேடலின் விளைவாக பசுபிக் சமுத்திரத்தில் மீன்களின் இனங்கள் பல கண்டறியப்பட இருப்பதாகவும் கூறப்படுகின்றது.



# சிசேரியனுக்குத் தடை

குழந்தை பிறக்கவில்லை என சில கர்ப்பிணித்தாய்மார்கள் அங்கலாய்ப்பதைக் காண்கின்றோம். ஆனால், நாட்கள் தள்ளி குழந்தை பிறப்பது குழந்தையின் மூளை வளர்ச்சிக்கு நல்லது என்கிறார்கள் மருத்துவ மேதைகள். குறைமாதத்தில் குழந்தை பிறக்கும்போது அதற்குச் சீரான முறையில் சுவாசத்துக்கான ஒட்சிசன் கிடைக்காமையால் அதனுடைய மூளையில் சில குழப்பங்கள் ஏற்படுகின்றன. நோட்டிங்காம் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிகளின்படி, 548 கர்ப்பிணித்தாய்மார்கள் எடுக்கப்பட்டார்கள். அவர்கள் 69 வைத்தியசாலைகள் மற்றும் 13 நாடுகளிருந்து பெறப்பட்டார்கள்.



இவர்களிடம் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின்படி, குறைமாதத்தில் பிறந்த பிள்ளைகளின் மூளை வளர்ச்சியில் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றன.

588 குழந்தைகள் ஆராயப்பட்டிருக்கின்றன. அதில் 290 குழந்தைகள் மூளை வளர்ச்சி குன்றியனவாக இருக்கின்றனர். இதன்மூலம் பிள்ளையைப் பெறும் பெற்றோர்களுக்குப் பொறுமையைக் காக்கவேண்டியநிலை ஏற்பட்டிருக்கின்றது. ஐரோப்பிய நாடுகளில் சிசேரியன் முறைக்கு சிலவேளைகளில் தடைவரலாம் எனவும் பேசப்படுகின்றது.

# வெற்றிகரமாகப் பிரிக்கப்பட்ட இரட்டையர்கள்



**பி**லிப்பைன்ஸ் நாட்டில் தலை ஒட்டிப்பிறந்த இரட்டைக் குழந்தைகள் வெற்றிகரமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இதற்குப் பல மாதங்கள் எடுத்திருக்கின்றன. இதனை ஒரு மரதன் சத்திர சிகிச்சை என அழைக்கின்றார்கள் வைத்தியர்கள்.



இந்தச் சத்திர சிகிசசை மொன்டிவொயர் மெடிக்கல் சென்ரர், நியூயோர்க்கில் நடைபெற்று முடிந்திருக்கின்றது.

இந்தச் சத்திரசிகிச்சை இவ்வளவு தூரம் வெற்றிகரமானதாக முடியும் என வைத்தியர்கள் நம்பவேயில்லை. ஏனெனில், மூளை நரம்புகளில் சத்திர சிகிச்சை என்பது ஒரு அரிதான விடயம்.

மூளை நரம்புகளை வெட்டும்போது பாய்கின்ற இரத்தம் மற்றைய இடங்களைக் காட்டிலும், அதிகம் என்கின்றார்கள் வைத்திய நிபுணர்கள்.

இந்தச் சத்திரசிகிச்சைக் குழாமினுடைய தலைவர் டாக்டர் டேவிட் ஸ்டாவின்பேர்க் தன்னுடைய குழாமினுடைய உறுப்பினர்களுக்குச் சத்திர சிகிச்சைக்கு முன் கூறியிருக்கின்றார்.

நீங்கள் எல்லோரும் இந்தக் குழந்தைகளுடைய தாய் என நினைத்து வேலையில் ஈடுபடுங்கள் என்று வெற்றிகரமான சத்திரசிகிச்சைக்குப் பின் இந்தக் குழந்தைகளினுடைய தாய் - அகடரி அம்மையார் ஆனந்தக் கண்ணீருடன் குழந்தைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

## ~துரித அபிவிருத்தித் திட்டத்தில்~
# தொழில்நுட்பக் கல்லூரியில் பயிற்சி பெற்றவர்கள் இணைப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நடைபெறும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு, தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிற்சி பெற்றவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதற்கான நேர்முகப்பரீட்சைகள் எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உள்ள நீர்ப்பாசனம், கட்டட நிர்மாணம், பாலம் அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்காகவே தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிற்சி பெற்றவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

குடிசார் இயந்திரவியல், கணிய அளவை, கட்டட நிர்மாணத்துறை, படவரைஞர் முதலான துறைகளில் பயிற்சி பெற்று வெளியேறிய சான்றிதழ் வைத்திருக்கும் அனைவரும் இந்த நேர்முகத் தேர்வுக்குத் தோற்ற முடியும் என கல்லூரியின் அதிபர் என்.யோகா[illegible] தெரிவித்தார். (ப)

## செஞ்சிலுவைச் சங்க உபதலைவராக குலரத்தினம் தெரிவு

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்ட கிளையின் உபதலைவராக இலங்கை செஞ்சிலுவைச் சங்க ஊர்காவற்துறைப் பிரிவுக் கிளையின் தலைவர் ப.குலரத்தினம் அண்மையில் நடந்த ஆட்சிக்குழுக் கூட்டத்தில் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

# பாடசாலைகளின் புனரமைப்புக்கு 900 மில்லியன் ரூபா நிதியுதவி

(வடமராட்சி)

கடந்த கால யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளை புனரமைக்கவென 900 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆறு வருடங்களில் செயற்படுத்தப்படவிருக்கும் திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்குத் தேவையான கட்டடங்கள், தளபாடங்கள் மற்றும் பௌதீக வள வசதிகள் போன்றவை ஏற்படுத்திக் கொடுக்கப்படவிருக்கின்றன.

இதேவேளை, மாகாணத்தில் எட்டு மாவட்டங்களினதும், கல்வி வலயங்களைச் சேர்ந்த 2002 பாடசாலைகளில் 150 பாடசாலைகள் இதுவரை மூடப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (17)

# விவசாய கிராமங்களின் அபிவிருத்தி தொண்டர் நிறுவனங்கள் நிதியுதவி!

(வடமராட்சி)

யாழ்.குடாநாட்டிலுள்ள 17 விவசாயக் கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கென சர்வதேச தொண்டர் நிறுவனங்களில் நிதியுதவியுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளின் கீழ் விவசாய ஆராய்ச்சி, விவசாயிகளுக்கான துறைசார் பயிற்சிகள், தொழில் மேம்பாட்டு உபகரணங்கள் வழங்கல், உதவிகள் வழங்கல் என்பன நடைமுறைப்படுத்தப்படுமென தெரியவருகிறது.

கடந்தகால யுத்த அனர்த்தங்களால், இடம்பெயர்வுகள் என்பவற்றால் பாதிக்கப்பட்டுள்ள யாழ்.குடாநாட்டு விவசாயிகளின் தொழில் மேம்பாடுகளை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (17)

## வீதிகள் திருத்தம்

கோண்டாவில் அரசடி வீதி ஊடாக வைத்தியசாலை வீதி, மற்றும் ரணில் நிலைய வீதிகள் திருத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றது.

இப்போது இந்த வீதியூடாக மக்கள் நடமாட்டமும், வாகன சேவைகளும் எதுவித தடங்களுமின்றி போக்குவரத்துக்கு சீர்செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (82)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

தனியார் கடன் எல்லையை இருபத்தி ஐயாயிரம் ரூபாவாக உயர்த்துவது எனவும், சங்கத்தால் வழங்கப்படும் கடன் நிதித் தொகையை ஐந்து லட்சம் ரூபாவாக உயர்த்துவது எனவும் சுண்டுக்குழி தெற்கு ஐக்கிய நாணய சங்கத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற இந்தச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

புதிய நிர்வாகிகள் தெரிவின் போது, தலைவராக கோ.தியாகராசாவும், உபதலைவராக ப.வி.யோசேப்பும், பொருளாளராக பவளகேசரீ வசந்தனும் மற்றும் நான்கு பேர் கொண்ட செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (31)

# வடமராட்சி கிழக்கு கடற்கரை வீதி ஜீ.ரி.இசற் உதவியுடன் புனரமைப்பு

(வடமராட்சி)

வடமராட்சிக் கிழக்கில் கட்டைகாடு தொடக்கம் சுண்டிக்குளம் வரையான கடற்கரை வீதி ஜி.ரி. இசற் நிறுவனத்தின் உதவியுடன் புனரமைக்கப்படவுள்ளது.

இதைவிட குடத்தனை திருச்சபை ஆலயத்திலிருந்து அம்பனுக்குச் செல்லும் ஊரியான் எல்லை வீதி 6 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது. இதற்கான நிதியை ஜி.ரி.இசற் நிறுவனம் வழங்கவுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடலொன்று மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுத பிள்ளை தலைமையில் எதிர்வரும் 24 ஆம் திகதி காலை 11 மணியளவில் நடைபெறவுள்ளது. இதில் ஜி.ரி. இசற் நிறுவன அதிகாரிகள் மற்றும் கிராமசேவை அலுவலர்கள் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர். (17)

## வரலஷ்மி பூஜை

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான ஸ்ரீ வரலஷ்மி விரத உற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

காலை 6.30 மணிக்கு அம்பாளுக்கு அபிஷேகமும், 8 மணிக்கு விசேட தீபாராதனையும், அர்ச்சனையும், 10.30 மணிக்கு உற்சவ பூஜையும் நடைபெற்று அடியார்களுக்கு விரதக் காப்பு வழங்கப்படும்.



வன்னிப் பதிவுகள்

# குற்றச் செயல்களில் ஈடுபட்ட ஐம்பது பேர் மடுவில் கைது

(மன்னார்)

மடு தேவாலயப் பகுதியில் குற்றச் செயல்களில் ஈடுபட்ட ஐம்பது பேருக்கு மேற்பட்டோரை தமிழீழ காவற்துறையினர் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு திருச்சொரூபம் வலம் வந்தபோது அதிகளவான களவுச் சம்பவங்கள் இடம்பெற்று உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மது விற்பனையில் ஈடுபட்டிருந்த ஒருவர் கைதுசெய்யப்பட்டு, மன்னார் மாவட்ட தமிழீழ நீதிமன்ற நீதியாளர் மயூரன் முன்னிலையில் முன்னிறுத்தப்பட்டு இன்றுவரை விளக்க மறியலில் வைக்கப்பட்டார்.

அத்துடன் ஐம்பதுக்கு மேற்பட்ட ஆண் - பெண் இருபாலாரும் கைது செய்யப்பட்டார். இவர்கள் அனைவருமே தென்பகுதியில் இருந்து சென்றவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பிற்பொக்கட், நகைகள், களவு எடுத்தமை தொடர்பாக கைதுசெய்யப்பட்டிருப்பதாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், உற்சவ கால காவற்துறைப் பொறுப்பாளா சி.இராஜகோபால் தெரிவித்தார்.

# உலக தரிசன நிதியுதவியுடன் கண்டாவளையில் நெற்களஞ்சியம்

(கண்டாவளை)

உலக தரிசனத்தின் உதவியுடனும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன அனுசரணையுடனும் கண்டாவளைப் பிரதேசத்தில் நெற்களஞ்சியம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி மாவட்ட கமக்கார அமைப்புக்களால் இந்த நெற்களஞ்சியக் கட்டடப் பணிகள் முன் எடுக்கப்பட்டு வருகின்றது.

மாவட்ட விவசாயிகள் நலன் கருதி குஞ்சுப்பரந்தனில் இவ்வாறானதொரு நெற்களஞ்சியம் 8 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

## முழங்காவில் கிராமங்கள் புனரமைக்கப்படவுள்ளன

முழங்காவில் பிரதேசத்தில் சில கிராமங்கள் புனரமைக்கப்படவுள்ளன.

மூன்றாம்பிட்டி, தேசன்பிட்டி, கணேசபுரம், சேவா ஆகிய கிராமங்களே புனரமைப்புச் செய்யப்படவிருக்கின்றன.

இந்தக் கிராமங்களில் புனரமைக்குத் தேவையான விடயங்கள் இனம்காணப்படவில்லை என்றும் இதற்கேற்ப புனரமைப்பு வேலைகளும் இடம்பெறவிருக்கின்றன.

## புனித செபஸ்தியாரின் திருநாள்

பூநகரி மண்ணித்தலையிலுள்ள புனித செபஸ்தியாரின் திருநாள் வைபவவிழா எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதிவரை பாசையூர் மக்களால் கொண்டாடப்படவுள்ளது.

இந்தத் தேவாலயத்துக்கு கடல் வழிப்பயணம் செய்யவும், செய்பவர்கள் திருவிழா இறுதிவரை அங்கு தங்கி நிற்பதற்கான அனுமதியை தேவாலய பரிபாலன சபையினர் யாழ்.மாவட்ட இராணுவத்தளபதியிடம் இருந்து பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது. (31)

## வன்னியில் நிரப்பப்படாத வைத்தியர் வெற்றிடம்

வைத்தியர்களுக்கான வருடாந்த இடமாற்றம் சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன்போது வைத்தியசாலைகளிலும், திணைக்களத்தின் அலுவலகங்களிலும் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இருந்தபோதும், வன்னிப்பகுதியில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு எந்தவித நடவடிக்கைகளும் அமைச்சு மேற்கொள்ளவில்லை என மருத்துவ வட்டாரங்களில் அதிருப்தி நிலவுகிறது.

திணைக்களத்தின் அலுவலகங்களில் காணப்படும் அதிகளவான வெற்றிடங்களால், நிர்வாகப் பதவிகளிலுள்ள வைத்தியர்களுக்கு வேலைப்பழு அதிகரித்துள்ளதால் அவர்கள் மிகுந்த பாதிப்புக்குள்ளாகின்றனர்.

மருத்துவர்களுக்கும், மருத்துவ நிபுணர்களுக்கும் காணப்படும் வெற்றிடங்கள் நிரப்பப்படாததால், வைத்தியசாலைகள் திருப்திகரமான சேவையை வழங்கமுடியாதிருப்பதோடு, கடமையில் இருக்கும் மருத்துவர்களும் மிகுந்த நெருக்குதல்களை எதிர்நோக்குவது குறிப்பிடத்தக்கது.



புதுக்குடியிருப்பில் அமைக்கப்பட்டு வரும் பொதுநூலக கட்டடம்.



இடிந்த நிலையில் காணப்படும் பரந்தன், முல்லைத்தீவுக்கு இடையிலுள்ள முரசுமோட்டை வீதி.

படங்கள்: ரமணன்

## ஜெயந்திநகர் பிரதான வீதி திருத்தப்படவில்லை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - ஜெயந்திநகர் பிரதான வீதி பலவருடங்களாக புனரமைக்கப்படாது உள்ளது. முன்னர் தாரினால் செப்பனிடப்பட்ட இந்த வீதி நீண்டகாலமாக திருத்தப்படாததால், இந்த வீதியால் பயணிக்கும் மக்கள் பலத்த சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே, இதனைத் திருத்த சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரியுள்ளனர்.

## கரடியான்குளம் புனரமைக்கப்படுகிறது

வவுனியா - நயினாமடு, ஆயலடி கரடியான் குளம் உலகவங்கியின் நியாப் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு வருகிறது.

1983 ஆம் ஆண்டு இந்தக் குளத்தின் அணைக்கட்டு உடைப்பெடுத்தது.

20 ஆண்டுகளின் பின்னர் தற்போது, இந்தக் குளத்தின் புனரமைப்பு வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தக் குளத்தின் கீழ் 150 ஏக்கர் நெற்செய்கை மேற்கொள்ளக் கூடிய வயல்காணிகள் உள்ளன. தற்போது இந்தக் குளத்தின் வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் 46 வரையான குடும்பங்கள் விவசாய முயற்சிகளை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## வரட்சி காரணமாக குடிநீர் பெறுவதில் சிரமம்

வவுனியாவில் ஏற்பட்டுள்ள வரட்சி காரணமாக குடிநீர் பெறுவதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவில் தற்போது ஏற்பட்டிருக்கும் வரட்சி காரணமாக மக்கள் எதிர்நோக்கும் குடிநீர்ப் பிரச்சினையைக் கட்டுப்படுத்துவதற்காக, வவுனியா மாவட்ட தேசியநீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் நடவடிக்கையெடுத்துள்ளனர்.

இதேவேளை- பொலநறுவை மற்றும் மகிரகினியப் பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சி காரணமாக, இரத்தப் போக்குடன் கூடிய வயிற்றோட்டம் பரவி வருவதாகத் தெரியவருகிறது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து*
*அதனை அவன்கண் விடல்.*

திருக்குறள்

## நமது நோக்கு

### விதியைத் தீர்மானிக்கும் வீதிகள்

அண்மைக்காலமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் இடம்பெற்றுவரும் விபத்துச் சம்பவங்கள் கோரமான உயிரிழப்புக்களை ஏற்படுத்திவருகின்றன.

இரண்டு வார கால இடைவெளிகளுக்குள் இருபாலைப் பகுதியிலும், மந்திகைப் பகுதியிலும் நிகழ்ந்த விபத்துக்கள் இருவரின் உயிர்களைப் பறித்திருந்தன. இத்தகைய விபத்துக்கள் தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றன.

குடாநாட்டில் மட்டுமன்றி, நாடு முழுவதிலும் வாகனங்களின் எண்ணிக்கையும் - வீதியில் அவற்றின் நடமாட்டமும் பன்மடங்கு அதிகரித்துவிட்டது.

விபத்துக்கள் அதிகமாக நடப்பதற்கு அதிகரித்த வாகனங்களின் தொகை, வாகன சாரதிகளின் கவனமின்மை, தரமற்ற வாகனங்கள், பாதசாரிகளின் கவனயீனம் போன்றவை காரணங்களாகக் கணிக்கப்படுகின்றன.

வீதி விபத்துக்கள் அதிகரித்தவுடன் பொலிஸார் செயலில் இறங்கி - லைசன்ஸ் பெறுவது கட்டாயம் என்று வீதிக்குவீதி சோதனைகளை நடத்தி குற்றப் பணத்தை அறவிட்டனர்.

அத்துடன், விபத்துக்கள் நடப்பது நின்றுவிட்டதா? லைசன்ஸ் பெற்ற சாரதிகள் செலுத்திச்சென்ற வாகனங்கள் விபத்துக்களில் சிக்கவில்லையா என்பன போன்ற கேள்விகள் ஒருபுறம் இருக்க -

இத்தகைய விபத்துகளுக்கு வேறும் காரணிகள் இருக்கலாமோ என்பது பற்றி யாருமே ஆராய்ந்ததாகவோ, அக்கறையெடுத்ததாகவோ தெரியவில்லை.

வாகனங்கள் விபத்துக்களில் சிக்குவதற்கு சாரதியின் தவறு மட்டுமே காரணம் எனக்கருதிவிட்டு சம்பந்தப்பட்ட தரப்பினர் ஒதுங்கியிருந்துவிட்டால் இத்தகைய விபத்துக்களும், மரணங்களும் நமது மண்ணில் அன்றாட நிகழ்வுகளாகிவிடும்.

அண்மைக்காலங்களில் நடந்த பல விபத்துக்களில் - பலரின் விதியை வீதிகளே நிர்ணயித்திருக்கின்றன என்ற செய்தி பரவலாக மக்களிடையே பேசப்படுகிறது.

வாகனங்களின் அதிகரிப்புக்கேற்ப குடாநாட்டில் உள்ள வீதிகள் திருத்தியமைக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவில்லை. இது முக்கிய பிரச்சினை. வீதி திருத்த நடவடிக்கைகள் சரியான முறையில் மேற்கொள்ளப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டுக்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் நிச்சயம் பதிலளித்தேயாக வேண்டும்.

ஏதோ பெயருக்கு குழிகளில் கற்களை நிரப்பி கொஞ்சம் தாரை ஊற்றிவிட்டால் சரி என்று புனரமைக்கப்படும் வீதிகள், ஓரிரு மாதங்களிலேயே மீண்டும் பழைய பிறப்பெடுத்துவிடுகின்றன. இப்படித்தான் அநேகமான வீதிகள் குடாநாட்டில் காட்சிதருகின்றன.

அண்மையில் இருபாலையிலும், மந்திகையிலும் இருவர் பலியான சம்பவங்களில் விபத்து இடம்பெற்ற வீதியின் தன்மை ஒத்திருந்ததைக் காணமுடிந்தது.

வீதியோரங்களில் சரியாகத் தார் ஊற்றப்படாமல் 'திடீர்' கிடங்காக - கற்களும் காணப்பட்ட இடங்களி லேயே இரு விபத்துக்களும் நிகழ்ந்திருந்தன. இரண்டிலுமே சைக்கிளோட்டிகள் தலை சிதறி உயிரிழந்திருந்தனர்.

இந்த இரு விபத்துக்களுக்கும் வேறு காரணங்கள் இருந்திருக்கலாம். அதை நீதிமன்ற விசாரணைகள் தான் முடிவுசெய்யவேண்டும். ஆனால், சம்பவங்கள் நிகழ்ந்த வீதிகள் ஆபத்து மிக்கவையாகக் காணப்பட்டன. அவை விபத்துக்கு காரணமாகியிருக்கலாம்.

கிடங்குகளும், கற்களும் கிடக்கும் வீதி - விபத்துக்களுக்கு காரணமாக அமைந்தது என்பதை எந்தவொரு வாகனச் சாரதியும் ஒத்துக்கொள்ளுவர்.

அதைவிட வீதிப் புனரமைப்புக்கு களிமண் போடப்பட்டு வீதியெங்கும் வெயிலில் புளுதியாகவும், மழையில் சகதியாகவும் காணப்படுகின்றன.

இவையெல்லாம் விபத்துக்களுக்கு காரணமாகிவிடுகின்றன என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

அதைவிட, கட்டாக்காலிகளாக திரியும் நாய்கள் என்று விபத்துக்கான புறக்காரணிகள் அதிகரித்துச் செல்கின்றன.

எனவே, சம்பந்தப்பட்ட தரப்பினர் வீதி விபத்தைத் தடுப்பதற்கு ஒருங்கிணைந்த நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் இப்போது எழுந்திருக்கிறது.

இதுவரை கவனத்திலெடுக்கப்படாத விபத்துக்களுக்கான காரணங்களைக் கண்டறிந்து அதற்கேற்ற வகையில் நடவடிக்கைகளை எடுப்பதன்மூலமே பாதுகாப்பான பிரயாணத்தை உறுதிசெய்யமுடியும்.

## நாடும் நடப்பும்




# பட்டதாரிகள் நியமனம் வழங்காவிடின் சுழற்சி முறையில் உண்ணாவிரதம்!

## டிப்ளோமாதாரிகள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அரச துறைகளில் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் தம்மையும் சேர்த்துக் கொள்ளாது விட்டால், சுழற்சிமுறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தப்போவதாக உயர் தொழில்நுட்பக் கல்லூரி டிப்ளோமாதாரிகள் தெரிவித்தனர்.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் டிப்ளோமாதாரிகள் இணைத்துக்கொள்ளப்படமாட்டார்கள் என நிதியமைச்சர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இதனை ஆட்சேபித்தே கணக்கியல் மற்றும் வர்த்தக டிப்ளோமாதாரிகள் தமது டிப்ளோமாச் சான்றிதழ் அரச சுற்றுநிருபத்துக்கு அமைய வர்த்தகமானிப் பட்டத்துக்குச் சமனானது என்றும், தமக்கும் அரச சேவைகளில் நியமனம் வழங்கப்படவேண்டும் எனவும், யாழ்.செயலகம் முன்பாக மறியற் போராட்டம் நடத்தியிருந்தனர்.

தமது போராட்டம் தொடர்பாக இதுவரையில் எந்த விதமான உறுதி மொழிகளும் தரப்படவில்லையெனத் தெரிவித்த டிப்ளோமாதாரிகள், எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் தமக்குச் சாதகமான பதிலைத் தராவிட்டால், தாம் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தப்போவதாகத் தெரிவித்தனர். (லெ)

## எம்.பிக்கள் குழு நாடு திரும்பியது

(கொழும்பு)

சமாதான நடைமுறைகள் குறித்து ஆராயும்பொருட்டு ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்ற இலங்கையின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு நேற்று நாடு திரும்பியது.

அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த உட்பட ஐந்து அமைச்சர்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான நடராஜா ரவிராஜ் ஆகியோரும் இந்தக் குழுவில் அங்கம் வகித்தனர்.

இந்தக் குழுவினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கையிலிருந்து புறப்பட்டு - ஜேர்மன், சுவிஸ், ஒஸ்ரியா போன்ற நாடுகளுக்குத் தமது சுற்றுப்பயணங்களை மேற்கொண்டிருந்தனர்.

அந்த நாடுகளில் பின்பற்றப்படும் சமாதானச் சூழ்நிலை குறித்து ஆராய்ந்ததுடன், இலங்கையில் முன்னெடுக்கக்கூடிய சமாதான முயற்சிகள் குறித்தும் ஆராய்ந்துள்ளார்கள் எனத் தெரியவருகிறது. (01)

## கொட்டடி பகுதியில் குடிநீர் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

கொட்டடிப் பிரதேசத்திலுள்ள கற்குளம் பகுதி மக்கள் குடிநீர்ப் பற்றாக்குறையால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அந்தப் பகுதியில் இதுவரை இடம்பெற்றுவந்த நீர் விநியோகம் கடந்த சில நாட்களாகத் தடைப்பட்டுள்ளதால் அங்கு வசிக்கும் மக்கள் நீர் பெறுவதற்காக நீண்டதூரம் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து, யாழ்.மாநகர சபையின் நீர் விநியோகப் பகுதியினருடன் அந்தப் பகுதி மக்கள் உரையாடியபோது- அவர்கள் பழுதடைந்த நீர் விநியோகக் குழாயைத் திருத்துவதற்கு வேண்டிய பொருட்களை - அந்தப் பகுதி மக்களையே விலைக்கு வாங்கித்தருமாறு கேட்டுள்ளார். இதனால், அந்தப் பகுதி மக்கள் இது குறித்துக் கவலை தெரிவித்துள்ளனர். (64)

## கல், மண் பறித்து இரு மாதங்களாகியும் வீதி திருத்தும் பணி நடைபெறவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆறுகால்மடம் பழைய வீதிப்பகுதியில் வீதிதிருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்படாமையால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக - இந்த வீதி திருத்தப்படாத நிலையிலுள்ளது.

இந்த வீதியைத் திருத்துவதற்கான கல், மண் முதலானவை அந்த வீதியின் இரு மருங்கிலும் பறிக்கப்பட்டு இரண்டு மாதங்கள் ஆகின்றபோதும், இதுவரை அந்த வீதி திருத்துவதற்கான எந்தவொரு பணியும் ஆரம்பிக்கப்படவில்லை. இதனால், பறிக்கப்பட்டுள்ள கல், மண், என்பன வீதியில் பரவி வீணாகப் போகும் நிலை தோன்றியுள்ளது.

இது குறித்து யாழ்.மாநகர சபையின் செயலாளரிடம் கேட்டபோது வீதி திருத்தும் பணி விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றார். ஆனால் வீதியில் பறிக்கப்பட்ட கல், மண் கும்பிகள் மீண்டும் உழவு இயந்திரங்களில் வரும் சிலரால் அள்ளப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.(ப)

## விடுதலைப் புலிகளின் கொள்கைகள் புதிய அரசாங்கத்துக்கு சிக்கலாம்

## ஜெயந்த தனபால தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகசபை யோசனை தொடர்பாக - அரசாங்கம் இன்னமும் மாற்று யோசனையை சமர்ப்பிக்காத நிலையில், அந்த யோசனைகளைத் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு ஏற்றுக் கொள்ளாது சிக்கலை ஏற்படுத்துமென, சமாதான செயலகப் பணிப்பாளர் ஜெயந்த தனபால லக்பிமவுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

அரசாங்கத்தால் மாற்றுயோசனைகள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. அந்த ஆலோசனையை அனைத்துக் கட்சிகளுக்கும் சமர்ப்பிப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

அரசின் மாற்றுயோசனைகள் தொடர்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இதுவரையும் உத்தியோகபூர்வமாக அரசுக்கு எந்தக்கருத்தையும் வெளிப்படுத்தவில்லை.

இந்த ஆலோசனைகள் தயாரிக்கப்பட்டதன் பின்னர், நோர்வே தரப்பினூடாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழ்த் தினப் போட்டிகள்

மாகாணமட்டத் தமிழ்த் தினப்போட்டிகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 10, 11, 12 ஆம் திகதிகளில் திருகோணமலையில் இடம்பெறவுள்ளது.

இந்தப்போட்டிகளில் எட்டு மாவட்டங்களில் இருந்தும் ஒவ்வொரு போட்டிகளிலும் முதல் இடத்தைப் பெற்றவர்கள் கலந்துகொள்கின்றனர்.

மாகாணமட்டப் போட்டிகளில் கலந்துகொள்ளும் பாடசாலைகள், தமது மாணவர்கள் பங்குபற்றுவதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளன. (லெ)

## நெடுந்தீவு கிழக்குப் பகுதிக்கு பஸ்சேவை விஸ்தரிப்பு!

நெடுந்தீவு கிழக்குப்பகுதிக்கான வட பிராந்திய போக்குவரத்துச்சபையின் பேரூந்து சேவை நேற்று முதல் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

மாவிலித் துறைமுகத்தில் இருந்து - கிழக்கு தீர்த்தக்கரை வரைக்குமான பகுதிக்கே இவ்விஸ்தரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்களது நலன் கருதியே தற்போது இந்தச் சேவை பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மேலும் விரைவில் பயணிகள் படகு சேவையின் போதும் பேரூந்து சேவை நடாத்தப்படவுள்ளதாக, வட பிராந்திய போக்குவரத்துச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன. இதன்படி காலை 7.00 மணிக்கு மாவிலித்துறைமுகத்தின தீர்த்தக்கரை வரையும், பகல் 2.00 மணிக்கு நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையிலிருந்து தீர்த்தக்கரை வரையுமே இந்தச் சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

தெற்குத் திசையினிலே...

இந்திரஜித்

# இலங்கையின் இறைமையைக் கேள்விக்குள்ளாக்கும் இலங்கை - வெளிநாடுகளுக்கிடையிலான ஒப்பந்தங்கள்

**தமக்கு எதிராக இலங்கை நாட்டு மக்களைத் திசை திருப்பி இந்தியாப் பொருட்களைக் கொள்வனவு செய்யக்கூடாது எனக் குரல் எழுப்பிய ஜே.வி.பியைக்கூட இந்தியா இன்று தமது வலைக்குள் போட்டுக்கொண்டது என்றால் அது இந்தியாவின் மிகச்சிறந்த காய்நகர்த்தல் என்றே கூறவேண்டும். நோர்வே- இலங்கையின் சமாதான விடயத்தில் அ[illegible] அக்கறை கொண்ட நாடு என்பது மட்டுமே வெளியில் தெரிந்த உண்மை.**

மக்கள் தெரிவு செய்த அரசாங்கம், அந்த மக்களுக்கே எதிராகச் செயற்படும்போது அந்த மக்களே அந்த அரசாங்கத்துக்கு எதிரான முனைப்புகளுக்கு தயாராகிவிடுவர். அது இலங்கையைப் பொறுத்தவரை தீவிரம் எனக்கூற முடியாவிட்டாலும், தேர்தல்களின்போது மக்கள் அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டே வருகின்றனர்.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர், நாட்டை ஆட்சி செய்த எந்தவொரு சிங்களத் தலைவரும் நாட்டை சிந்தித்துச் செயலாற்றவில்லை என்றே கூறவேண்டும். முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க, சுய பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப் படுத்தியபோதும், அது மக்களைச் சிந்திக்க வைக்கும் செயற்பாடாக இல்லாமல் அரசாங்கத்தின் மீது ஆத்திரத்தைக் கொண்டுவரும் நடவடிக்கையாக அதனை மாற்றிவிட்டது.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ வீடமைப்புத் திட்டத்தை ஓரளவு திருப்தியாக நடைமுறைப் படுத்தினாலும்கூட அவருடைய காலத்துடன் முடிந்துவிடும் திட்டமாகவே அது அமைந்துவிட்டது. அதேபோன்றுதான் இலவச கல்வித்திட்டமுமாகும். இலவச கல்வியைப் பொறுத்தவரை அதன் முழுத்தன்மை இலங்கை மக்களுக்குக் கிடைக்கும் வண்ணம் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் உதாரணங்களாக உணர்த்துகின்றன. இவற்றைப் போன்றதே அன்றிலிருந்து முளைவிட்ட இனப் பிரச்சினையும் என்பதை யாவரும் அறிவர். இனப்பிரச்சினைக்கு அன்றே தீர்வு காணப்பட்டிருக்குமானால் இன்று பெற்றோலியதுறையை இந்திய நிறுவனத்துக்குக் குத்தகைக்குக் கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது.

நாட்டின் வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யவோ அல்லது குத்தகைக்கு விடவோ வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. இனப் பிரச்சினையும், நாட்டின் வளச்சுரண்டலும் இன்று ஒன்றுடன் ஒன்று கலந்துவிட்டன. முன்னர் இலங்கையை இந்த நாட்டு மன்னர்களிடமிருந்து யுத்தங்கள் மூலம் வென்றெடுத்துப் பின்னர் ஆட்சி நடத்திய மேலைநாட்டவரே இந்த நாட்டின் வளங்களைச் சுரண்டியதாகப் படித்திருக்கிறோம். ஆனால், இன்று சுதந்திர இலங்கையில் நவீன சுரண்டல் ஒன்றுக்கு தெரிந்தும், தெரியாமலும் அனைவருமே ஆட்பட்டுள்ளோம். வரலாறு காணாத பொருளாதார சிக்கலில் இலங்கை தவித்துக் கொண்டிருக்கிறது.

ஆனால், விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற பிரமையில் அனைவரும் சந்தோஷப்பட்டுக் கொள்கிறோம். இலங்கையைப் பொறுத்தவரை ஏதாவது ஒரு நாடு உதவி செய்கிறது என்றால் அந்த நாட்டுடன் இலங்கையின் அரசாங்கம் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவது வழக்கம். குறிப்பிட்ட ஒப்பந்தமானது பொதுவாக இரண்டு நாடுகளுக்கும் நன்மை பயக்கும் ஒப்பந்தமாகவே அமைவது தான் பொருத்தமானதாக இருக்கும். ஆனால், இன்று இலங்கையின் அரசாங்கங்கள் ஏனைய நாடுகளுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ளுமானால் அது இலங்கைக்கு பாதகத்தைக் கொணடு வந்துவிடும் என்ற உணர்வையே ஏற்படுத்துகிறது. இலங்கை - நோர்வே, இலங்கை - இந்தியா, இலங்கை - அமெரிக்கா, இலங்கை - பிரித்தானியா, இலஙகை - ஜப்பான், இலங்கை - சீனா என ஒப்பந்தங்கள் நீண்டு சென்று கொணடிருக்கின்றன. இந்த அனைத்து ஒப்பந்தங்களுமே இலங்கையின் நன்மை கருதி அல்லது இரக்கப்பட்டு வெளி நாடுகள் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் இல்லை என்பதை நடைமுறையில் அனைத்து தர மக்களும் தெரிந்தே வைத்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சியின் போது ஜப்பான் தொலைக்காட்சிக் கோபுரம் ஒன்றை இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், அன்பளிப்புக்காக ஜப்பான் தமது நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அனைத்து ரக தொலைக்காட்சிப் பெட்டிகளுக்குமான சிறப்பான சந்தையாக இலங்கையை உருவாக்கிக் கொண்டது. சீனாவுடன் முன்னர் இலங்கை அரசாங்கம் உணவுப் பொருட்களின் பரிமாற்றங்களையே அதிகமாகக் கொண்டிருந்தது. ஆனால், பின்னர் வந்த காலப்பகுதியில் சீனாவில் இருந்து இலங்கை அரசாங்கம் தமது மக்களுக்கு எதிரான யுத்தத்துக்காக ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய முன்வந்தது. அதேபோலவே அமெரிக்கா, இலங்கையுடன் ஆயுத ஒப்பந்தங்களைச் செய்துகொண்டு தமது நாட்டுக்கு அதிக வருமானத்தைத் தேடிக்கொள்கிறது.

இந்தியாவைப் பொறுத்தமட்டில் அந்த நாடு இலங்கையின் பொருளாதாரத்தில் அதிக செல்வாக்குச் செலுத்தும் நாடாக அது இன்று உருவாகியுள்ளது. இதில் ஒரு சிறப்பம்சம் என்னவென்றால், தமக்கு எதிராக இலங்கை நாட்டு மக்களைத் திசை திருப்பி இந்தியா பொருட்களைக் கொள்வனவு செய்யக்கூடாது எனக் குரல் எழுப்பிய ஜே.வி.பியைக்கூட இந்தியா இன்று தமது வலைக்குள் போட்டுக்கொண்டது என்றால் அது இந்தியாவின் மிகச்சிறந்த காய்நகர்த்தல் என்றே கூறவேண்டும். நோர்வே- இலங்கையின் சமாதான விடயத்தில் அதிக அக்கறை கொணட நாடு என்பது மட்டுமே வெளியில் தெரிந்த உண்மை.

ஆனால். அந்த ஒன் - லைன் லொத்தர் இலங்கையின் கரையோர எண்ணெய் வளம், கண்டுபிடிப்பு என்பவற்றில் அந்த நாடு தம்மை ஈடுபடுத்திக்கொண்டிருப்பது சமாதானத்துக்கு அப்பால் அந்த நாட்டின் செயற்பாடுகளாகும். இந்த நிலையில் வெளி நாடுகள் தாம் நட்டப்பட்டு இலங்கைக்கு உதவி செய்யவேண்டும் என்ற எதிர்பார்ப்பு எவரிடமும் இல்லை. ஆனால், இன்று இலங்கைக்கு உதவிசெய்ய வரும் நாடுகள் அனைதது்ம், சமாதானத்தை முதலீடாகக் கொண்டே இலங்கையின் வளங்களைத் தமது வசப்படுத்துகின்றனவா? என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் உருவாகத் தொடங்கியுள்ளது. நோர்வே நேரடியாகவே இலங்கையின் இனப்பிரச்சினையில் தலையிட்டுள்ளமை யாவருக்கும் தெரிந்த விடயம். ஆனால் அமெரிக்கா, ஜப்பான், இந்தியா போன்ற நாடுகள் சமாதானத்தில் தற்போதைக்கு நேரடிப் பங்காளிகளாக இல்லாத போதும், அவை சமாதானத்தை வலியுறுத்திக் கொண்டு தமது நாட்டு நலன்களைப் பேணி வரும் நிலைப்பாட்டை மேற்கொண்டு வருகின்றன. இதற்குச் சிறந்த உதாரணம் இலங்கையின் இனப்பிரச்சினை பேச்சுவார்த்தையின் மூலமே தீர்க்கப்படவேண்டும் எனக்கூறும் அமெரிக்கா அடிக்கடி தமது படை நிலை அதிகாரிகளை இலங்கைக்கு அனுப்பி இலங்கையின் படை நிலையை உயர்த்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன், இலங்கைப் படைகளுக்கு ஆயுத மற்றும் பயிற்சி உதவிகளை அது செய்து வருகினறமையாகும்.

அமெரிக்காவின் வெளிநாட்டு கொள்கையானது நிலையானது என்ற அடிப்படையில் அது முன்பிருந்தே இவ்வாறான முனைப்புக்களை இலங்கையில் ஏற்படுத்திக்கொண்டிருந்தது. ஆனால் இந்தியாவின் இலங்கை மீதான தாக்கம் காரணமாக அந்த முனைப்பில் வேகம் சற்று குறைந்தே காணப்பட்டது. இந்தியாவுக்கும் இலஙகைக்கும் இடையில் 1987 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட ராஜரீதியான முறுகல் அமெரிக்காவுக்கு சாதகமான நிலையை ஏற்படுத்திவிட்டது.

எனவே அமெரிக்கா சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு இலஙகையின் தமது காலை இறுக்கப்பதித்துக்கொண்டது. திருகோணமலையின் துறைமுகம் அதற்கு பிரதான நோக்கமாக இருந்தபோதும், இந்தியாவின் நகர்வு அதற்கு இதுவரை இடம் தரவில்லை. ஆனால் இலங்கையில் தாமும் ஒரு தீமானிக்கும் சக்தி எனபதை அமெரிக்க நிரூபித்துக்கொணடிருக்கின்றது.

இந்தியாவை பொறுத்தவரை இனப்பிரச்சினை தீர்வில் தாம் நோர்வேயின் தலையீட்டுக்கு எதிர்ப்பில்லை என கூறினாலும் நோர்வே சமாதனத் தொடர்பில் எந்த தீமானத்தை அல்லது எந்த நகர்வை மேற்கொண்டாலும் அது தொடர்பில் இந்தியாவுக்கு அறிவிக்க வேண்டும் என்ற நடைமுறையை சற்று கூடிப்போன செல்வாக்காகவே கருதப்படுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் அமைந்திருந்தபோது அவரின் பாதுகாப்பு வலைப்பின்னல் யாவும் பெரும்பாலும் அமெரிக்காவுடன் தொடர்புபட்டிருந்தது.

ஆனால் தற்சமயம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் பாதுகாப்பு வலைப்பின்னல் பெரும்பாலும் இந்தியாவையே சார்ந்திருந்தது. இந்த நிலையில் இன்று இந்திய இலங்கையின் பாதுகாப்பை மட்டுமல்ல இலங்கையின் பொருளாதாரத்தில் செல்வாக்கு செலுத்தும் நாடாகவும் பாரிய அளவில் பங்களிப்பை மேற்கொள்ளத் துணிந்து விட்டது.

இதன் ஒரு கட்டமே ஏற்கனவே இரண்டு நாடுகளுக்கும் இடையில் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் செய்துகொள்ளப்பட்ட சுதந்திர வர்த்தக வலய ஒப்பந்தமாகும். இதன் பின்னர் இந்தியா திருகோணமலை எண்ணெய் குதத்தை குத்தகைக்குப் பெற்றதுடன் பெற்றோலிய விநியோகத்தின் பெரும் பகுதியை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது குறிப்பிடக்கூடிய நகர்வுகளாகும். தற்சமயம் இந்தியாவின் கைகளில் முழு பெற்றோலிய விநியோகமும் செல்லப்போகிறது என்பதை எதிர்த்தே நாட்டின் பெற்றோலியத் துறை ஊழியர்கள் போரட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

இது ஒரு ஒருபுறம் இருக்க ஐக்கிய தேசியக்கட்சி நாட்டின் வளங்களை தனியாருக்கு விற்பனை செய்வதாக எதிர்ப்புத் தெரிவித்து வந்த இன்றைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - ஐக்கிய தேசியக் கட்சியின் நடவடிக்கையை முன்னெடுக்கிறது என்பதை மக்கள் உணரத் தலைபட்டுள்ளார்கள். எது எப்படியோ இலஙகையில் யுத்தம் ஒன்றைச் சாட்டாக வைத்து வெளிநாடுகள் இலங்கையின் இறைமையைப் பாதுகாக்கப் போவதாக கூறியபோதும் தற்சமயம் சமாதானத்தை மையமாகக்கொண்டு வெளிநாடுகள் இலங்கையின் இறைமையை பாதிக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ள அரசாங்கம் இடம்தரக் கூடாது என்பதே அனைவரதும் விருப்பமாக அமைந்துள்ளது. ◆

சமயக் கட்டுரை

அருளானந்தம்

# அன்பர்களின் அல்லல் நீக்கி அருளளிக்கும் அன்னையின் கோயிலில் கொடியேற்றம்

பராசக்தியே துர்க்கை என்னும் பெயரும், வடிவமும் கொண்டு, பக்தர்களுக்கு அருள் புரிந்து உலகைப் பரிபாலித்து வருகின்றாள். துர்க்கம் என்பது அகழி. அது மதிலைப் பகைவர் அணுக முடியாமற்



செய்வது போல தன்னை வழிபடும் அன்பர்களைத் துன்பம் அணுகா வகையில் காத்தலால் இவள் துர்க்கை எனப் பெயர் பெற்றாள். துர்க்கை அரசர்க்கும், வீரர்க்கும் உரிய வழிபாடு தெய்வம்.

ஐப்பசி மாதத்தில் வரும் நவராத்திரி விழாவில் கௌரி, லட்சுமி, சரஸ்வதி ஆகிய மூவரும் சேர்ந்து ஒருவருமாகத் திகழ்பவள் துர்க்கை. இவள் அக்கினிகலை, சூரியகலை, சோமகலை என்னும் முக்கூறும் தன்பாற் கொண்டவள் நாம் நம் ஆபத்துக் காலத்தில் தேனில் தோய்த்த வெட்சிப் பூவைத் தூவி துர்க்க குந்தம் என்னும் மந்திரம் ஓதி அருச்சனை செய்து வழிபட்டால் எல்லா இன்னல்களும் பிணிகளும் சூரியனைக் கண்ட பனிபோல விலகி ஒழியும். இவள் தனது நான்கு கைகளிலும் முறையே சங்கு, சக்கரம், வில், அம்பு ஏந்தி இருப்பாள். தலையில் முடியும் பிறையும் குடியிருப்பாள். சிங்க வாகனமும், பசும் புல்லின் நிறமும் கொண்டவள். மானும் இவளுக்கு வாகனம் ஆகும்.

இவளைக் கொற்றவை எனவும் கூறுவர். எருமைத் தலையை உடையவனாக இருந்த மகிஷன் என்னும் கொடிய அசுரனை வென்று கொன்றதனால் இவளுக்கு மகிஷாசுர மர்த்தினி எனப் பெயர் வழங்குவதாயிற்று. தமிழகத்தின் பல கோயில் களிலும் மகிஷாசுர மர்த்தினியின் அழகிய சிற்பங்களைக் காணலாம். மகாபலிபுரம், கங்கை கொண்ட சோழபுரம். நாமக்கல் முதலிய இடங்களில் மகிஷாசுரமர்த்தினியின் அழகிய அற்புதச் சிற்பத் திருவுருவங்கள் அமைந்திருக்கின்றன.

சிலப்பதிகாரத்தில் வேட்டுவ வரியில் இளங்கோவடிகள் மகிஷாசுரமர்த்தினியின் திருவுருவத்தினைச் சிறந்ததொரு சொல்லோவியமாக வரைந்து காட்டியுள்ளார்.

அவள் யானைத் தோல் போர்த்துப் புலியின் உரியை உடுத்துள்ளாள். கானத்து எருமைக் கருந்தலை மேல் நிற்கின்றாள். வானோர்கள் வணங்க மறைமேல் மறையாகி ஞானக் கொழுந்தாய் விளங்குகின்றாள். வளையணிந்த கைகளில் வாளேந்தி இருக்கின்றாள். மான் ஊர்தியில் ஏறி, மகிஷனை அழித்தாள். அரி, அரன், அயன் என்றும் மூவரின் இதய மலாகளில் சோதி விளக்காகச் சுடர் வீசி விளங்குகின்றாள்.

அவளது தாமரை போன்ற கைகளில் சங்கும், சக்கரமும் தவழ்கின்றன. சிவந்த கண்களை உடைய சிங்கத்தின் மீது ஊர்ந்து வருகின்றாள். சிவபிரானின் திருமேனியின் ஒரு பகுதியில் உறைகின்ற அவளை வேதங்களெல்லாம் தொழுதேத்திப் பணி புரிகின்றன. அத்தகைய சிறப்பு மிக்க துர்க்காதேவியம்மையின் ஆலயம் ஈழநாட்டில் யாழ்ப்பாணம் தெல்லிப்பழையில் அமைந்திருக்கின்றது.

இப்பதியிலுள்ள ஒரு பிரிவாகிய பழுதற்ற உழவுத் தொழிலைக் கைக் கொண்டுள்ளோரும் கொடைப் பண்புளாருஞ் செறிந்திலங்கும் உழுகுடைப்பதி வவுணாவத்தையிலே அன்னையின் அருள் கோயில் "உம்பினாற் பெற்ற பயனாவதெல்லாம் உடம்பினுள் உத்தமனைக் காணல்'' என்னும் நெறிக் கேற்ப வாழ்ந்த சைவமரபிலே வந்த பெரியார் கதிர்காமர் அவர்கள். அக்காலத்தில் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே நெருங்கிய தொடர்பிருந்ததால் இங்குள்ளோர் தல யாத்திரையின் பொருட்டு இந்தியா செல்வதும் திரும்பி வருகையில் தெய்வ மூர்த்தங்களைக் கொண்டு வருவதும் அடிக்கடி நிகழ்வதாயிருந்தன. இவ்வகையின் இப்பெரியாரின் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் இன்று நிகழ் காலத்தில் துர்க்காதேவியின் திருத்தல நிலைக்கு அத்திவாரமாயின.

ஏறக்குறைய 1750-55 ஆண்டுக் காலத்தில் மேற்படி பெரியார் அவர்கள் காங்கேயன் துறையின் தோணியேறி தென் இந்திய வேதாரணியத்தையடைந்தார்.

இந்தியாவிலே அறுபத்தினான்கு சக்தி பீடங்களுள் துர்க்கை சகல கலைகளுடன் பொலிந்திருக்கும் மிக முக்கியமான காசிசொப்பனேஸ்வரி ஆலயத்தில் பக்தர்கள் ஒரு தாம்பாளத்தில் ஸ்ரீ சக்கரத்தையமைத்து தலத்தின் எவ்வித்திலேனும் அன்னையை எழுந்திருளுவித்துப் பூஜை, ஆராதனை செய்வது வழக்கம். பெரியார் கதிர்காமர் அவர்களும் ஸ்ரீ சக்கரம் கங்கா தீர்த்தம், துர்க்கா தர்த்தம் என்பன மூலம் பூஜை செய்து வந்தார்.

பின் அவர் யாழ்ப்பாணம் திரும்பியபோது அந்த துர்க்கா இயந்திரத்தையும் துர்க்கா திருமுக வெண்கலத் தீர்த்தத் கெண்டியையும் தம்முடன் கொணர்ந்தார்.

காங்கேசன்துறையினின்று கீரிமலையையடைந்து தீர்த்தமாடி அங்கிருந்து மூன்று மைல் தூரம் அவர் நடந்து வந்ததும், சோர்வுற்று தளர்ந்து, உழுகுடைப் பதியிலே இலுப்பை மரத்தோப்பொன்றிலே உறக்கத்தி லாழ்ந்தார்.

வேண்டுதல் வேண்டாமையற்ற துர்க்கை அவர் கனவிலே சோதியாகத் தோன்றி, அவர் கொண்டு வந்த புனிதப் பொருட்களை அங்கேயே கழுவி வழிபடுமாறு ஆணையிட்டார். அவ்வாக்கைச் சிரமேற்கொண்டு கதிர்காமர் அவற்றை ஒரு மரத்தடியில் ஸ்தாபித்து நியமிந்தவறாது பூசித்து வருவராயினர். இன்று அந்த இடமே ஆயிரமாயிரம் அன்பர்களுக்கு அல்லல் நீக்கி அருளளிக்கும் அன்னையின் கோயிலாகவுள்ளது.

இத்தகு பெருமைகளை தன்னகத்தே கொண்டு விளங்கும் தெல்லிப்பழை துர்க்காதேவியின் ஆலயத்தில் ஆண்டு தோறும் நடைபெறும். மகோற்சவங்கள் அருள் விழாக்களே சிவத்தமிழ் அன்னை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் தலைமையில் சைவ கலாசார ஆன்மிகப் பெருவிழாவாக நடைபெறவுள்ள மகோற்சவம் - இந்த தாரண வருஷம் 2004-08-17 ஆம் திகதி தொடங்கி நடைபெறுகின்றது.

27-08-2004 தேர்த்திருவிழா வெகுசிறப்பாக நடைபெறவுள்ளது. பல்லாயிரக் கணக்கான அடியார்கள் இம்முறை மஹோற்சவத்தில் கலந்து அம்பாளின் திருவருளை பெறுவர். ◆

## ஈராக்கின் நஜாவ் நகரிலிருந்து

# பத்திரிகையாளர்களை வெளியேறுமாறு ஈராக் பொலிஸார் கோரிக்கை விடுப்பு!



ஈராக்கின் நஜாவ் நகரிலிருந்து அனைத்து ஊடகவியலாளர்களையும் வெளியேறுமாறு ஈராக் பொலிஸ் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக பொலிஸ் அதிகாரி ஊடகவியலாளர்களிடம் தெரிவித்ததாவது -

தற்போது நஜாவ் நகரம் மூடப்படுகின்றது. இந்த நகருக்குள் ஊடகவியலாளர்கள் யாராவது இருக்கவிரும்பினால் அவர்கள் கைதுசெய்யப்படுவார்கள் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, ஈரானின் தொலைக்காட்சி நிறுவனத்தைச் சேர்ந்த மொகமட் காசிம் - நஜாவ் நகரிலிருந்த வீடொன்றின் கூரையிலிருந்து பொலிஸார் ஆயுதங்களுடன் நிற்பதனை படமெடுத்து ஈரானில் நேரடியாக ஒளிபரப்புச் செய்துகொண்டிருந்தவேளை ஈராக்கியப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

இந்தச் சம்பவங்களையிட்டு பாரிஸைத் தலைமையகமாகக் கொண்ட எல்லைகளற்ற சுதந்திர ஊடக அமைப்பு கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

அத்துடன் ஊடகவியலாளர்களின் சுதந்திரத்தைப் பறிப்பதும், அவர்களது செய்திகளை தணிக்கை செய்வதையிட்டும் அந்த அமைப்பு தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நஜாவ் நகரில் நேற்றுமுன்தினம் முதல் ஆட்லறி மற்றும் துப்பாக்கிச்சூட்டுச் சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சதாருடன் யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்துவது குறித்த பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்தபின்னர், ஈராக்கிய அரசாங்கம் மீளவும் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென தெரிவித்த பின்னரே இந்தச் சத்தங்கள் கேட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நஜாவ் நகரில் உள்ள மயானத்தில் நிலைகொண்டிருக்கும் அமெரிக்கப் படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் கொல்லப்பட்டதுடன். மற்றொருவர் காயமடைந்ததாக வைத்தியர் ஒருவர் தெரிவித்தார்.

நஜாவில் இடம்பெற்றுவரும் மோதலை எவ்வளவு விரைவாக முடிவுக்குக்கொண்டுவர முடியுமோ அவ்வளவு விரைவாகக் கொண்டுவந்து, அங்கு இயல்பு நிலையைத் தோற்றுவிப்பதற்காக விரைவில் படையினர் மிகப்பெரிய நடவடிக்கையை எடுப்பார்கள் என ஈராக்கின் உள்துறை அமைச்சுப் பேச்சாளர் சபா காதீம் தெரிவித்தார்.

இதேவேளை, ஈராக்கில் அடுத்த வருடம் இடம்பெறவுள்ள தேர்தலை சுதந்திரமான முறையில் நடத்துவதற்காக 100 பேர்கொண்ட இடைக்கால நிர்வாகசபை உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக மத மற்றும் அரசியல் தலைவர்கள் நேற்றுமுன்தினம் பாக்தாத்தில் கூடியிருந்தனர். ஆனாலும் இந்தப் பேச்சுவார்த்தையில் சதார் கலந்துகொள்ளவில்லை.

இந்த இடைக்கால நிர்வாகசபை உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான கூட்டத்தை ஆரம்பித்துவைத்து பிரதமர் அலாவி உரையாற்றுகையில்- இந்த இடைக்கால நிர்வாகசபை அமைக்கப்பட்டதென்பது எதிர்காலத்தில் அடையவுள்ள இலக்குகளை அடைவதற்கான முதற்படி எனத் தெரிவித்தார்.

## பாகிஸ்தானில் தாக்குதல் நான்கு படையினர் உயிரிழப்பு

பாகிஸ்தானில் படையினர் மீது இனந்தெரியாத ஆயுதக்குழுவினர் மேற்கொண்ட தாக்குதலில் நான்கு படையினர் கொல்லப்பட்டதுடன், மூவர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதல் பாகிஸ்தானின் குவெட்டா மாகாணத்தின் சுயி பகுதியில் இடம்பெற்றது.

இந்தப் பகுதியில் படையினர் வழமையான ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவேளை, அருகிலுள்ள மலைப்பகுதியில் மறைந்திருந்த இனந்தெரியாத ஆயுதக்குழுவினர் றொக்கட் தாக்குதலை நடத்தியதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தாக்குதல் நடைபெற்ற பிரதேசம் பாகிஸ்தானின் மிகப்பெரிய இயற்கை எரிவாயுப் பகுதியெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரதேசத்தில் கடந்த வாரம படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது பெருமளவு வெடிமருந்துகள், பற்றிகள் மற்றும் தன்னியக்கக்கருவிகள் என்பன அழிக்கப்பட்டதாக முதலமைச்சர் ஜாம் மொகமட் யூசுப் தெரிவித்தார்.

## கடலில் சென்ற படகில்

# திடீரென தீப்பற்றியதில் 12 பயணிகள் உயிரிழப்பு

இந்தோனேஷியா அருகேயுள்ள பெலாங் கடலில் மோட்டார் படகு 45 பயணிகளுடன் பிதுங் மாவட்டத்திலிருந்து போலாங் மாங்கோடோவ் நகருக்குப் புறப்பட்டது. கரையிலிருந்து 4 கிலோமீற்றர் தூரத்தில் படகு சென்றபோது அதில் தீப்பிடித்தது.

என்ஜின் அறையிலிருந்து கிளம்பிய தீப்பொறிதான் இந்த விபத்துக்குக் காரணமென்று கூறப்படுகிறது. தீப்பிடித்து எரிவதைப் பார்த்ததும் பயணிகள் கடலில் குதித்தனர். அப்படிக் குதித்தவர்களில் 12 பேர் நீந்தத் தெரியாததால் கடலில் மூழ்கி உயிரிழந்தனர். 25 பயணிகளும், 8 சிப்பந்திகளும் மீட்புக்குழுவினரால் மீட்கப்பட்டனர்.

# ஆயுள்தண்டனைக் கைதிக்கு 150 கோடி ரூபா அதிஷ்டம்!

லண்டனைச் சேர்ந்தவர் லார் ஒ்த ஹோரே 52 வயதான இவர் பெண்ணைப் பாலியல் வல்லுறவு புரிந்த குற்றத்திற்காக ஆயுள்தண்டனை பெற்றவர். திறந்தவெளி சிறையில் தண்டனை அனுபவித்து வருகிறார்.

இந்த நிலையில் லண்டனில் சனிக்கிழமைதோறும் நடைபெறும் அதிஷ்டலாப ரிக்கட் வாங்கினார். அவரும் நண்பர்கள் 2 பேரும் சேர்ந்து கூட்டாக இந்த ரிக்கட்டை வாங்கி இருந்தனர். அந்த ரிக்கட்டுக்கு 150 கோடி ரூபா பரிசு விழுநதிருக்கிறது ஆனால், பரிசு கிடைத்தும் பணத்தை வாங்கி அனுபவிக்கமுடியாத நிலையில் ஹோரே இருக்கிறார்.

சிறையில் இருப்பவர்கள் தற்காலிகமாகப் பிணையில் விடுதலை ஆனவர்கள் அல்லது தண்டனைக் காலம் முடிந்து வெளியில் வருபவர்கள் அதிஷ்டலாப ரிக்கட் வாங்க இங்கிலாந்து உள்துறை சட்டத்தில் இடம் உள்ளது.

ஆனால், பணம் வழங்கும் துறையோ தண்டனை அனுபவிக்கும் குற்றவாளிக்கு பணம் வழங்கும் அதிகாரம் இல்லை என்று பணம் வழங்க மறுக்கிறது. இதனால் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்பதால் பணத்தைப் பெறமுடியாமல் ஹோரே தவிக்கிறார்.

ஹோரே பல பாலியல் வல்லுறவு வழக்குகளில் தண்டனை பெற்றவர் 1970 ஆம் ஆண்டிலும், 1980 ஆம் ஆண்டிலும் இவர் இந்தக் குற்றங்களில் ஈடுபட்டு இருக்கிறார். அதன் பிறகு 1983 ஆம் ஆண்டில் மீண்டும் இதே குற்றத்தில் ஈடுபட்ட போது பொலிஸாரால் பிடிக்கப்பட்டு 7 வருடம் சிறைத் தண்டனை அனுபவித்தார். அதன் பிறகு விடுதலையான இவர் மீண்டும் அதே குற்றத்திலீடுபட்டதால் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் தண்டனை அனுபவித்து வருகிறார். இதில் விடுதலையான பிறகுதான் அவருக்குப் பரிசுப் பணம் கிடைக்கும் வாய்ப்புள்ளது.




## கடலில் தத்தளித்த

# 6 ஈரானிய மாலுமிகளை அமெரிக்க கடற்படை மீட்பு



(தெஹ்ரான்)

வளைகுடாக் கடற்பரப்பில் தத்தளித்துக்கொண்டிருந்த ஆறு ஈரானிய மாலுமிகள் அமெரிக்கக் கடற்படையினரால் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

ஈரானிய மாலுமிகள் சென்ற கப்பலில் உடைவு ஏற்பட்டதைத் தொடர்ந்து குறிப்பிட்ட கப்பலில் பயணம் செய்த மாலுமிகள் அபாயச் சமிக்ஞை ஏற்படுத்தியுள்ளனர்.

இதனை அவதானித்த அமெரிக்கப் படையினர் தமது கடற்படைக் கலத்திலிருந்த ஹெலிகொப்டர்களின் உதவியுடன் ஈரானிய மாலுமிகளைக் காப்பாற்றியுள்ளனர்.

காப்பாற்றப்பட்ட மாலுமிகள் ஈரானியத் துறைமுகமொன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டு மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

அமெரிக்கக் கடற்படையினரால் ஈரானிய மாலுமிகள் காப்பாற்றப்பட்டமையானது ஈரானுக்கும், அமெரிக்காவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவினை வலுப்படுத்துமெனத் தெரிவிக்கப்படுகிறது.

## கவர்ச்சி உடையில் நடனமாடும் குரங்கு



தாய்லாந்தின் பாங்கொக் நகரில் ஒரு சேர்க்கஸ் கம்பனியில் ஓராங்குதான் வகை அபூர்வக் குரங்குகளும் இடம்பெற்றுள்ளன. இந்தச் சேர்க்கஸ் கம்பனியைச் சேர்ந்த ஓராங்குதான் குரங்குகள் கார்மீது நின்றுகொண்டு கவர்ச்சி உடையுடன் நடனம் ஆடுவது, குத்துச்சண்டை போடுவது போன்ற நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டுகின்றன.

ஓராங்குதான் குரங்குகளை இந்தச் சேர்க்கஸ் கம்பனி உரிமையாளர் கடத்திவந்து எப்படி அவற்றை சேர்க்கஸ் கம்பனியில் சேர்த்தது என்பது தெரியவில்லை. அந்தச் சேர்க்கஸ் கம்பனி உரிமையாளரிடம் பொலிஸார் விசாரணை நடத்திவருகின்றனர்.

## ஐரோப்பிய ஆசிய கண்டங்களிலுள்ள

# அமெரிக்கப் படையினரில் எழுபதாயிரம் பேர் வாபஸ்

ஐரோப்பா, ஆசியக் கண்டங்களில் அமெரிக்கா தனது ராணுவத்தை நிறுத்தி இருக்கிறது. ஐரோப்பாவில் 1 லட்சம் வீரர்கள் முகாமிட்டுள்ளனர். இதில் ஜேர்மனியில் மட்டும் 70 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். பசுபிக் கடற்பகுதியில் 1 லட்சம் வீரர்களும், ஈராக், ஆப்கானிஸ்தான் நாடுகளில் 1 இலட்சம் வீரர்களும் இருக்கிறார்கள்.

ஐரோப்பா, ஆசியா கண்டங்களில் இருக்கும் 70 ஆயிரம் வீரர்களை வாபஸ்பெற ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் முடிவுசெய்துள்ளார். வாபஸ் எப்போது நடைபெறும் என்பது வெளியிடப்படவில்லை.

# 150 றுவாண்டாப் படையினர் சூடானுக்கு செல்லவுள்ளனர்



சூடானிலுள்ள ஆபிரிக்க யூனியனின் யுத்தநிறுத்தக் கண்காணிப்பாளர்களைப் பாதுகாப்பதற்காக றுவாண்டாவின் 150 படையினர் இந்த வாரம் சூடான் செல்லவுள்ளனர். இவ்வாறு செல்லவுள்ள படையினர் பொதுமக்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபடமாட்டார்களென றுவாண்டாவின் வெளியுறவு அமைச்சர் சார்லஸ் முறிகண்டே தெரிவித்தார்.

ஆனாலும், ஆபிரிக்க யூனியனிலிருந்து மேலும் 2500 சமாதானப் படையினரை சூடானுக்கு வரவழைப்பது தொடர்பாகப் பேச்சுக்கள் நடத்தப்படவுள்ளதாக ஐ.நாவின் விசேட பிரதிநிதி ஜான் புறோங் தெரிவித்தார்.

பொதுமக்களைப் பாதுகாப்பதற்கு சூடானுக்கு ஆபிரிக்க யூனியன் சமாதானப் படையினரை அனுப்பும் திட்டத்தை சூடான் அரசாங்கம் கடந்தவாரம் நிராகரித்த போதும், சமாதானப் படையினரை அங்கு அனுப்பவேண்டுமென்ற அழுத்தங்கள் சூடான் அரசிற்கு அதிகரித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சமாதானப் படையினரை சூடானுக்கு அனுப்புவது தொடர்பாக அந்தநாட்டு அரசுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை இடம்பெறுவதாகவும், இந்தப் பேச்சுவார்த்தையின் முடிவு திருப்திகரமாக இருக்குமெனவும் றுவாண்டாவின் வெளியுறவு அமைச்சர் முறிகண்டே பி.பி.ஸிக்குத் தெரிவித்தார். எதிர்வரும் காலத்தில் மேலதிகமாக கண்காணிப்புக்குழு வருவதனை தான் வரவேற்பதாகவும் அதிலும் ஆபிரிக்கக் கண்காணிப்பாளர்கள் கூடுதலாக வரவேண்டுமெனவும் ஐ.நாவின் பிரதிநிதி புறோங் தெரிவித்தார்.

அத்துடன் டார்பூர் அகதிமுகாமைச் சுழவுள்ள 20 கிலோமீற்றர் பிரதேசத்தைச் சுற்றி பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்த வேண்டுமென்று சூடான் அரசிற்கு விடுத்த கோரிக்கையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கான திட்டம் எதிர்வரும் நாட்களில் இறுதிவடிவம் பெறும்வேளை ஜான்ஜாவீட் ஆயுததாரிகளுட்பட எந்தவொரு ஆயுதம் தாங்கியவர்களும் அந்தப் பகுதிக்குள் செல்லமுடியாதெனவும் புறோங் தெரிவித்தார்.

## குமுறும் எரிமலை



இந்தோனேஷியாவின் கிழக்கு ஜாவா பகுதியில் உள்ள சுரபாயா மலைப்பகுதி. இங்குள்ள சிமுரு என்ற எரிமலை கடந்த சில நாட்களாகக் குமுறிக்கொண்டிருக்கிறது. எரிமலையின் உச்சியில் இருந்து சாம்பலும், புகையும் தீப்பிழம்பும் வந்துகொண்டிருக்கிறது.

எந்த நேரத்திலும் அது பயங்கரமாக வெடித்துச்சிதறும் அபாயம் உள்ளது. இதனால் அந்த மலைப் பகுதியில் உள்ளவர்கள் பத்திரமான இடத்துக்கு அனுப்பப்பட்டு வருகிறார்கள். சுற்றுலாப் பயணிகள் செல்லவும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இந்தோனேஷியாவில் 100 இற்கும் மேற்பட்ட எரிமலைகள் உள்ளன.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## ஒலிம்பிக் பதக்க விபரம்

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 7 | 3 | 1 | 11 |
| அவுஸ்ரேலியா | 6 | 1 | 3 | 10 |
| ஜப்பான் | 4 | 1 | 1 | 6 |
| ஐக்கிய அமெரிக்கா | 3 | 4 | 5 | 12 |
| பிரான்ஸ் | 2 | 2 | 3 | 7 |
| இத்தாலி | 2 | 2 | 1 | 5 |
| துருக்கி | 2 | 0 | 1 | 3 |
| உக்ரெய்ன் | 2 | 0 | 1 | 3 |
| ரஷ்யா | 1 | 4 | 2 | 7 |
| ஜேர்மனி | 1 | 1 | 1 | 3 |
| ஹங்கேரி | 1 | 1 | 1 | 3 |
| தென்கொரியா | 1 | 0 | 2 | 3 |
| தாய்லாந்து | 1 | 0 | 2 | 3 |
| தென்னாபிரிக்கா | 1 | 0 | 0 | 1 |
| நெதர்லாந்து | 0 | 2 | 3 | 5 |
| போலந்து | 0 | 2 | 0 | 2 |
| கொரிய குடியரசு | 0 | 2 | 0 | 2 |
| ஸ்லோவாக்கியா | 0 | 1 | 1 | 2 |
| ஒஸ்ரியா | 0 | 1 | 0 | 1 |
| ஸ்பெயின் | 0 | 1 | 0 | 1 |
| பிரிட்டன் | 0 | 1 | 0 | 1 |
| ஜோர்ஜியா | 0 | 1 | 0 | 1 |
| இந்தோனேசியா | 0 | 1 | 0 | 1 |
| போர்த்துக்கல் | 0 | 1 | 0 | 1 |
| சேர்பியா | 0 | 1 | 0 | 1 |
| சிம்பாப்வே | 0 | 1 | 0 | 1 |
| கியூபா | 0 | 0 | 3 | 3 |
| பெல்ஜியம் | 0 | 0 | 2 | 2 |
| பல்கேரியா | 0 | 0 | 2 | 2 |
| ஆர்ஜென்ரீனா | 0 | 0 | 1 | 1 |
| பிறேசில் | 0 | 0 | 1 | 1 |
| கொலம்பியா | 0 | 0 | 1 | 1 |
| செக் குடியரசு | 0 | 0 | 1 | 1 |
| மொங்கோலியா | 0 | 0 | 1 | 1 |

## இரண்டு குடும்பங்கள் நெடுந்தீவு திரும்பின

கடந்தகால போர் காரணமாக நெடுந்தீவிலிருந்து இடம்பெயர்ந்து தமிழகம் அகதிமுகாமில் வசித்து வந்த இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த ஆறு பேர் நேற்றுக்காலை யு.என்.எச்.சி.ஆரின் உதவியுடன் நெடுந்தீவுக்கு திரும்பினர்.

கடந்த வெள்ளிக்கிழமை இந்தியா விலிருந்து விமானம்மூலம் அழைத்து வரப்பட்ட இவர்களுக்கு கொழும்பு விமானநிலையத்தில் வைத்து குடும்ப மொன்றுக்கு தலா 25 ஆயிரம் மீள் குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப் பட்டு, அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். (113)

## வெடிபொருள் வெடித்து சிறுவன் காயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் சிறுவ னொருவன் வெடிபொருள் ஒன்றைச் சோதித்த போது அது வெடித்ததில் சிறுவனும் இன்னொருவரும் காயம டைந்தனர்.

நேற்று முன்தினம் காலை 8.40 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வீட்டு வாசலில் கிடந்த வெடிபொருள் ஒன்றை எடுத்து வந்து சோதித்துப் பார்த்த அந்தச் சிறுவ னும், அருகில் பாதையால் சென்று கொண்டிருந்த ஒருவரும் காயம டைந்த நிலையில் கிளிநொச்சி மருத் துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிவநகர் பகுதியைச் சேர்ந்த நா.அஜித் (வயது 8) என்ற சிறுவன் மற்றும் மாணிக்கம் (வயது 62) ஆகியோரே காயமடைந்தனர்.

## புனர்வாழ்வு..

செயற்பாடுகளுக்கு 90 மில்லியன் ரூபா நிதி வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

காக்கைதீவுப் பகுதியிலேயே கூட்டெரு தயாரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் நேற்றைய கலந்துரையாடலில் முடி வெடுக்கப்பட்டுள்ளது. (ப)

## ஐ.தே.க ஆட்சியிலிருந்தால்...

உலக நாடுகள் உறுதியளித்துள்ள 4.5 பில்லியன் டொலர் உதவித் தொகையைப் பெற்றுக் கொள்வதற்கு இடைக்கால நிர்வாகம் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்படுவது வேடிக்கையானது. இது தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சியும், சமாதான வியாபாரிகளும் அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

கூட்டணிக்குள் நிலவும் கருத்து வேற்றுமைகளைச் சாதகமாகப் பயன்படுத்தி அரசாங்கத்துக்கு ஆத ரவு வழங்கி தம்மைச் சமாதானத் தின் காவலர்களாக இனங்காட்ட ஐக்கிய தேசியக்கட்சி முயல்கிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணி அரசில் உள்ள கூட்டணிக் கட்சிகளுக்கிடையில் கொள்கை வேறு பாடுகள் உள்ளன. ஆனால் அவை கூட்டணியைக் கலைத்துவிடும் என்று ஐக்கிய தேசியக்கட்சி கனவு காண் கிறது.

அது ஒருபோதும் நிறைவேறாது. சில விடயங்களில் கொள்கை வேறு பாடுகள் உள்ளபோதிலும் அடிப் படை விடயங்களில் நாம ஒருமித்த கருத்துடையவர்களாகவேயுள்ளோம்.

தீர்வையற்ற வாகனங்களை விடு தலைப்புலிகளுக்கு வழங்குவதன் மூலம் தமிழ் மக்களின் பிரச்சி னைகளுக்கு தீர்வுகாணமுடியாது. அது விடுதலைப்புலிகளின் பிரச்சி னைக்கு மட்டுமே தீர்வாக அமையும்.

வடக்கு - கிழக்கு மக்கள் அமை தியாக வாழவே விரும்புகிறார்கள். தமது குழந்தைகளுக்கு உரிய கல்வி வழங்கப்படவேண்டும். தமது வாழ்க்கைத்தரம் உயரவேண்டும் என்பதே அவர்களின் நிலைப்பாடு.

இடைக்கால நிர்வாகசபை தமிழ் மக்களுக்கு தேவையற்ற ஒன்று. அது விடுதலைப் புலிகளுக்கு மட் டுமே தேவைப்படும் விடயம்.

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகசபை குறித்த யோசனைக ளின் அடிப்படையில் பேச்சுவார்த் தைகள் ஆரம்பிக்கப்படமாட்டாது என்ற உத்தரவாதத்தை அரசாங்கத் திடமிருந்து ஏற்கனவே பெற்றுக் கொண்டுள்ளோம்.

தமிழீழத்தை உருவாக்கும் முயற் சிகளை தவிர்த்துக்கொள்ள முடிந்த அரசாங்கத்தால் கொழும்பிலும், கிழக்கிலும் இடம்பெற்றுவரும் தொடர் கொலைகளுக்கு எதிராக நடவடிக் கைகளை மேற்கொள்ளமுடியாத கையறுநிலை காணப்படுவதைத் தாம் ஒத்துக்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார். (01)

## சமாதானப் பேச்சுக்களை...

**கேள்வி :** தொடர்ச்சியாக வெளி நாட்டுப் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளை மட்டும் சந்தித்துச் செல்கி றார்கள், அரசாங்கத்தினுடைய நிலைப பாட்டைப் பெறவில்லையா?

**பதில் :** இன்று ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடிநிலையை தமிழீழ விடுத லைப் புலிகளிடம் அறிந்து செல் வது சர்வதேசத்தின் ஒரு கரிசனை யாக இருக்கின்றது. அந்த அடிப் படையில் நாங்கள் எங்களுடைய நிலைப்பாடுகளை எடுத்துச் சொல் வது நல்ல அறிகுறியாகத்தான் இருக்கும் என நம்புகிறேன்.

**கேள்வி :** சர்வதேச சமூகம் ஏதா வது அழுத்தத்தைப் பிரயோகிக்கின் றதா?

**பதில் :** சர்வதேச சமூகம் விடு தலைப் புலிகள் மீது அழுத்தத்தைப் பிரயோகின்றது என்பது ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதல்ல. புலிக ளுக்கும் அவர்கள் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் தருகிறார்கள். மீண்டும் சமாதானப் பேச்சுக்களைத் தொடங்குவதற்காக ஈடுபடவேண்டும் என்கின்ற அவர்களுடைய ஆலோச னையைத்தான் சொல்கின்றார்கள். அழுத்தத்தைப் பிரயோகிப்பதாகத் தெரியவில்லை.

**கேள்வி :** தென்னிலங்கையின் அரசியல் சக்திகளிடையே இனப் பிரச்சினைகள் தொடர்பாக ஒருமித்த கருத்தை ஏற்படுத்துவதற்கு ஏதா வது முயற்சிகள் மேற்கொள்ளப் படுகிறதா?

**பதில் :** அதைத்தான் நாங்கள் இன்று வலியுறுத்தியிருக்கின்றோம். தென்னிலங்கையில் தங்களுடைய அதிகாரத்தைப் பலப்படுத்துவதற் கும் அதிகாரப் போட்டிகள் காரண மாகவும் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் இழுத்தடிக்கப்படக் கூடாது.

இந்தச் சமாதான முயற்சிகள் இழுத்தடிக்கப்படுவதால் பாதிக்கப் பட்ட எங்களுடைய தமிழ் மக்கள் இதில் நம்பிக்கை இழந்து கொண்டு, விரக்தியடைந்து செல்கிறார்கள். இது மிக நெருக்கடியான கட்டத்துக் குள் தள்ளிவிடும் என்ற அச்சத்தை யும் அவர்களுக்கு வெளிப்படுத்தியி ருக்கிறோம்.

**கேள்வி :** இதில் ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகள் எந்தக் கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள்?

**பதில் :** அவர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் எங்களின் நிலைப்பாட்டை அறிந்து செல்லும் நோக்கோடு வந்திருக்கிறார்கள். ஆகவே, எங்களுடைய நிலைப் பாட்டை அவர்களுக்குத் தெளிவாக் கியிருக்கிறோம். அரசாங்கத்தரப் பிலும் எடுத்துச்சொல்வார்கள் என்று நம்புகிறோம்.

அவர்கள் சில கரிசனையை வெளிப்படுத்தினார்கள். தற்போது நடக கின்ற அரசியல் சூழ்நிலை சம்பந்த மாகவும், சிறுவர்கள் நலன் தொடர் பான விடயங்களை எங்களின் கவ னத்துக்கு கொண்டுவந்தார்கள். அதைப்பற்றியும் நாம் அவர்களுக்கு தெளிவான விளக்கத்தைக் கொடுத் திருக்கிறோம். தற்பொழுது இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கை இரண் டரை வருட காலமாக ஓரளவு நடை முறைப்படுத்தப்பட்டு வந்தது.

தற்பொழுது கிழக்கிலே குறிப் பாக மட்டக்களப்பு மாவட்டத்திலே ஆயுதக்குழுக்களை மீண்டும் செயற் பட அனுமதித்திருப்பது கருணா குழு, ஈ.பி.டி.பி குழு இணைந்த குழுக்கள் மீண்டும் இந்த சமாதானச் சூழலைச் சீர்குலைக்கும் நடவடிக் கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

அவர்களுக்குள் ஏற்பட்ட முரண் பாடுகள் குழப்பம் காரணமாகவே இந்தப் படுகொலைகள் நடந்துகொண டிருக்கிறது என்பதையும் அவர்க ளுக்குத் தெளிவாக எடுத்துக் கூறி யிருக்கின்றோம்.

ஏனெனில், அந்தக் குழுக்களில் இருந்து தப்பி வந்தவர்கள் தாக்கு தலில் ஈடுபட்டு அதிலிருந்து தப்பி வெளியேறி வந்தவர்களின் தகவல் படி அவர்களுக்கு ஆதாரப்படுத்தியி ருக்கிறோம்.

ஆகவே, அவர்களுக்குள் ஈ.பி.டி. பியும், கருணா குழுவும் சேர்ந்து இன்று இந்தச் சமாதான சூழ்நிலை யைச் சீர்குலைக்கும் நோக்கோடு செயற்பட்டு வருகிறார்கள்.

அதனுடைய பிரதிபலிப்பும் அவர் களுக்குள் ஏற்பட்ட முரண்பாடும் தான் இந்தப் படுகொலைகளுக்கு காரணமாக இருக்கும் என்றுதான் எங்களால் உணரமுடிகிறது என்ப தையும் அவர்களுக்குத் தெளிவாக் கியிருக்கின்றோம்.

**கேள்வி :** புனரமைப்பு உதவிக ளைப் பற்றி ஏதாவது கதைக்கப்பட் டதா?

**பதில் :** அதைப்பற்றி இன்று பேச வில்லை. சமாதானப் பேச்சுக்களை மீளத் தொடக்குவதற்கான ஒரு சூழ் நிலைகள் பற்றியே இன்று நாங்கள் கூடுதலான நேரம் கருத்துகளைப் பரிமாறினோம்.

## ஈ.பி.டி.பியின் பிரசார...

வெள்ளவத்தை டபிள்யூ.ஏ.டி. சில்வா மாவத்தையில் வசித்துவந்த இவர் நேற்றுக்காலை தனது பிள் ளைகளை பாடசாலைக்கு அனுப்பி விட்டு - கட்சி அலுவலகத்துக்கு செல்வதற்காக வாகனத்தில் ஏறுவ தற்கு வந்து கொண்டிருந்த போதே சுடப்பட்டார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரே இவர் மீது சரமாரியான துப்பாக்கிச்சூடு நடத் தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவரது உடலில் 6 துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்திருந்ததாகவும், தலை, நெஞ்சு பகுதிகளில் காய முற்ற இவர் அந்த இடத்திலேயே உயிரிழந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவரது சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பிரேத பரிசோ தனைக்காக வைக்கப்பட்டிருந்தது. மூன்று பிள்ளைகளின் தந்தையான சின்ன பாலா,

1976 இல் மாணவர் பேரவையில் இருந்திருக்கிறார். பின்னர் ஈரோஸ் அமைப்புடன் செயற்பட்ட இவர் யாழ். மாவட்ட பொறுப்பாளராக இருந்தவர்.

பின்னர் 1990 இற்கு பின்னர் குடாநாட்டுப் பத்திரிகை ஒன்றில் பணி யாற்றிய இவர் 1997 இல் ஈ.பி.ஆர். எல்.எவ்வுடன் இணைந்துகொண்டார்.

ஈபி.ஆர்.எல்.எவ் இல் வலி-கிழக்கு பிரதேசசபைத் தேர்தலில் போட்டி யிட்டு வெற்றி பெற்ற இவர் பின்னர் ஈ.பி.டி.பியில் இணைந்தார்.

கடந்த மூன்று பொதுத்தேர்தல் களில் ஈ.பி.டி.பி.யின் சார்பில் யாழ். மாவட்டத்தில் போட்டியிட்ட போதும் இவற்றில் வெற்றிபெற முடியவில்லை.

இவர் இறுதிவரை கட்சியின் பிர சார செயலாளராக தொடர்ந்து ஈடு பட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக் கது. இவரது கொலைக்கு ஈபிடிபி கண்டனம் தெரிவித்துள்ளது.

## நாட்டுப்பற்றாளர்...

அவரது அனுபவமும், ஆற்றலும் தேசப்பணிக்கு பெரும் உறுதுணை யாக இருந்தது.

இவரது திடீர் மறைவு குறித்து துயருற்றிருக்கும் அவரது குடும்பத் தாருக்கும், உறவினர், நண்பர்க ளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிக ளின் அரசியற்துறையினர் தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித் துள்ளனர்.

தொழில்நுட்பக் கல்லூரியில் பயிற்சியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கும்
ஏனைய தொழில்நுட்ப வல்லுனர்களுக்கும்

**வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான நேர்முகப் பரீட்சை**

தொழில்நுட்பக் கல்லூரியில் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கும் ஏனைய தொழில் நுட்பவல்லுநர்களுக்கும் வெளிநாடுகளில் தொழிலைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு தற்போது யாழ். மாணவர்களுக்குக் கிட்டியுள்ளது.

கீழ்வரும் தொழில்துறைகளுக்கு வெளிநாட்டில் வேலையை பெற்றுக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை 20.08.2004 வெள்ளிக்கிழமை யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை ஸ்ரீலங்கா தொழில்பயிற்சி அதிகாரசபையின் - வேலைவாய்ப்பு பிரிவினரால் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. தகுதியானவர்கள் உரிய கல்வி, மற்றும் தொழில் சான்றிதழ்களுடன் நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

பதவிகள்:-

Carpenters, Fitters, Welders, Masons, Heavy Equipment Mechanics, Carpenter Supervisor, Plumber Supervisors and Experienced Plumbers, Experienced Electricians Supervisor Engineer, Quantity Survior, Civil Engineer, Civil Foremen and Operators for Excavator, Caterpillar, Crane, Folk Lift, Dozer, Heavy Equipment, Elevator, Trailer.

ஏற்பாடுகள்:-
N.Yogarajan,
Principal
Technical College,
Jaffna.

L.II.O.Abeyagunawardena,
Director (Job Placemene, Career Guidance & Special Programe)
VOCATIONAL TRAINING AUTHORITY
SRI LANKA

(C/2939)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 17.08.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.